ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,841 — 1969 පෙබරවාරි 14 වැනි සිකුරාදා — 1969.2 14

14,841 ம் இலக்கம் — 1969 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 153 | ஆயவிற்பனேயும், குத்தகை விற்பனேயும் .. .. | 174 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 165 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 166 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | 172 | ஏல விற்பனேகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனேயும் பிறவும் .. .. | 172 | நானுவித அறிவித்தல்கள் .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

### "இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனேகள்"

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. கேள்விக்குரிய நிபந்தனேகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளேகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளேகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளேப்பாற்றுச் சம்பளத்துக் குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களேயொழிந்த ஏனேயோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினுல் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினுலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணே செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலேவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணே) கட்டளேச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படி செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனேக் காலம், எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயறபடுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுதத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுககும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனேக்குட்படல் வேண்டும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலே கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
பதில் அரசாங்க அச்சகர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1968 ம் ஆண்டு திசெம்பர் மீ 20 ந் உ.

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள்; அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

*5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ ஸ்ரீலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.*

*6. யுத்தச்சேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும்படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும், தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாகப் பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றேவெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.*

---

இல. AB 13/X 2060/69

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

**பதவி : அதிபர், இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி**

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின்கீழுள்ள இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின் வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 1969.3.1.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1969.3.7.

**குறிப்புகள் :**

**(i)** அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

**(ii)** விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக்கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

**(iii)** வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும் பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

**(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும் :** இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்கு பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுபவர் கைம்பெண் அனாதை இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு கட்டணம் செலுத்த வேண்டும். நியமனதாரி முதற்கண் 3 வருட காலத்திற்கு தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

**3. சம்பளமும் ஏனைய படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :— ரூ. 11,760—480 × 3—600 × 4—ரூ. 15,600 வருடாந்தம்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைகைள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1969 ம் ஆண்டு மாச்சு மாதம் 1 ந் திகதியன்று 35 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வர்த்தகத்தில் அல்லது பொருளியலில் அல்லது எந்திரவியலில் வழங்கப்படும் சிறப்புப் பட்டம் பெற்றிருப்பதுடன் பட்டப்பின் அல்லது உயர்தொழில் தகைமைகள் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) பல்கலைக் கழக அல்லது தொழில்நுட்பக் கல்லூரி மட்டத்தில் 10 வருடத்துக்குக் குறையாத கற்பித்தல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(உ) 5 வருடத்துக்குக் குறையாத நிருவாக அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(ஊ) சிங்களத்தில் கடமை புரிதற்கான ஆற்றல் பெற்றிருக்க வேண்டும் அல்லது நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்திற்குள் சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு :**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக் கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழிநுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு :

(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7 விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ௵ பெப்புருவரி ௴ 7 ந் உ.

**2—423—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841**

---

இல. வெ.மு/5/172.

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### தேசீய விஞ்ஞான பவுண்டேசன் புலமைப் பரிசில்கள்—கோடைக் காலத் திட்டம்—1969 ஆம் ஆண்டு

அனுபவம்வாய்ந்த விஞ்ஞான், கணித ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தற்கென அதன் பொருட்டு தேசீய விஞ்ஞான பவுண்டேசனால் கோடைக் காலத் திட்டத்தின் கீழ் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் செல்லுபடியான 5 புலமைப் பரிசில்கள் அளித்தற்பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஒரு மத்திய மகா வித்தியாலயத்திலேனும் மகா வித்தியாலயத்திலேனும் தற்போது விஞ்ஞானமும் (அதாவது பௌதிகம், இரசாயனம், தாவரவியல், உயிரியல், விலங்கியல் ஆகிய பாடங்களில் ஒன்றை அல்லது கூடியவற்றை) கணிதமும் உயர்தர மட்டத்தில் படிப்பித்தலில் ஈடுபட்டுள்ளவர்களும் நல் நுண்ணறிவு ஆற்றலும் அனுபவமும் வாய்ந்துள்ளவர்களுமான விஞ்ஞான/கணித ஆசிரியர்களுக்கு இவை வழங்கப்படும். பயிற்சியைப் பூர்த்தி செய்து இந்நாட்டுக்குத் திரும்பி வந்தபின் பாடசாலைகளில் விஞ்ஞானமும் கணிதமும் படிப்பித்தலிலும் சேவையில் உள்ளவர்க்கான பயிற்சித் திட்டங்களிலும் பாடவிதான மாற்றியமைப்புத் திட்டங்களிலும் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவராய் இவர்கள் இருக்க வேண்டும்.

2. **கால எல்லை.**—புலமைப் பரிசில்கள் செல்லுபடி காலம் சாதாரணமாக எட்டு வார அளவினதாகும்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்று காரணங்களையிட்டு ஐக்கிய அமெரிக்க நாட்டு அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. **தகவுத்திறன்.**—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டும் :—

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1.4.69 அன்று 45 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான/கணித பட்டதாரியாகவேனும் உயர்தர பயிற்றப்பட்ட விஞ்ஞான/கணித ஆசிரியராகவேனும் இருக்க வேண்டும்.

(iv) க. பொ. த. ப (சாதாரணதர) வகுப்பில் விஞ்ஞானத்தை அல்லது கணிதத்தைப் படிப்பிப்பதில் 5 வருடங்களுக்கு மேலான அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(v) புதிய பாடப் பொழிப்புகளுக்கும் பாடத்திட்டங்களுக்கும் அமைய விஞ்ஞானத்தையும் கணிதத்தையும் படிப்பிப்பதில் அனுபவமும் பெற்றிருக்கவேண்டும்.

(vi) ஆங்கிலத்தில் உயர்ந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(vii) ஐக்கிய அமெரிக்க நாடுகளில் பயிற்சி அனுபவமேனும் கல்வியேனும் இதற்குமுன் பெற்றிருக்கலாகாது.

குறிப்பு 1.—சேவையிலுள்ளவர்க்கான பயிற்சித் திட்டங்கள், கற்கை வட்டங்கள், பாடவிதான மாற்றியமைப்புத் திட்டங்கள், வெளிவேலைப்பயிற்சிகள், பாட வரைவுத் திட்டங்கள், விசேட திட்டங்கள், நானுவித ஆராய்ச்சித்திட்ட முயற்சிகள் ஆகியவற்றில் பங்குபற்றியுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**குறிப்பு 2.**—விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ் வுடன்படிக்கையில் அல்லது முறி விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.4.69 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

**குறிப்பு 3.**—தற்காலிக நியமனங்களை வகிக்கும் ஆசிரியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனல் நியமனங்களில் உறுதிப்படுத்தப் படாதவர்களுமான ஆசிரியர்களும் விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார்.

4. **அளிப்பு நிபந்தனைகள்.**—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கு போய்த்திரும்புதற்கான பிரயாண ஏற்பாடு.

(ஆ) நியாயமான சீவன்சகாயப்படி.

(இ) பயிற்சிக் காலத்தில் ஏற்படும் ஏனைய அவசிய செலவுகளை மீளநிரப்பல்.

**குறிப்பு.**—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒருநேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்கவேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள் பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்கவேண்டும்.

6. **வைத்திய பரீட்சை.**—தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்கள் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினுல் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேறவேண்டும்.

7. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார்.

8. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவுசெய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவுசெய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

9. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவுசெய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

10. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக்கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

11. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

12. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

13. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1969 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 26 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

14. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூ. 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூ. 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

15. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதிரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்கவேண்டும். அங்ஙனம் செய்யத்தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

டீ. ஜீ. தயாரத்ன,
நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆண்டு பெப்புருவரி மீ 6 ந் வ.

2-409—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841

---

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### கீழைத்தேய சங்கீத உதவிப் பரிசோதகர் பதவிகள்

கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள கீழைத்தேய சங்கீத உதவிப் பரிசோதகர் பதவிகளுக்கு, கீழே விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வோரிடமிருந்து கோரப்படுகின்றன. கீழ்க் காணும் படிவ முறையில் தயாரிக்கப்படும் விணணப்பங்கள் " நிரந்தரக் காரியதரிசி (பொது நிர்வாகக் கிளை), கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்தில் 1969 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 27 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

2. **சம்பள விகிதம்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—ரூ. 1,980—16 × 120—ரூ. 3,900வருடாந்தம். வருடாந்தம் ரூ. 2,820 சம்பளப்படியில் வினைத்திறமைகாண் தடை ஒன்றுண்டு.

3. **நியமன நியதிகள்.**—

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் உபகாரச் சம்பள உரித்துடையனவையுமாகும். நியமனம், முதற்கண், 3 வருட காலங்களுக்கு தகுதிகாண் முறையில் அமையும்.

(ii) நியமதாரிகள் விதவைகள், அனுதைகள் உபகாரச் சம்பள நிதிக்குக் கட்டணம் கட்டவேண்டும். பெண்ணெருவர் நியமிக்கப்படுமிடத்து, அவர் சேமலாப நலன்களுக்கு உரித்துடையவராவர்; அவர் அரசினர் சேவை சேமலாப நிதிக்கு சம்பளத்தில் 5% வீதம் கட்டணம் செலுத்த வேண்டும். பெண் உத்தியோகத்தர் ஒருவர் 10 வருட சேவையைப் பூர்த்தி செய்யுமுன் எந்நேரத்திலேனும், சேமலாப நிதிக்குத் தொடர்ந்து கட்டணம் செலுத்தவா அல்லது உபகாரச் சம்பளத் திட்டத்துக்கு மாற்றப்படவா விரும்புகிறரென அறிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் உபகாரச் சம்பள விதிகளின் கீழ் உபகாரச் சம்பளத்துக்கு உரித்துடைய ஆசிரியராக அல்லது சேமலாப நிதி உரித்துடைய ஒரு பதவியில் அல்லது இவ்விரண்டிலும் ஏற்கனவே 10 வருட சேவையைப் பூர்த்தி செய்திருப்பின், மேற்குறித்த விருப்பம் நியமனத் திகதியிலிருந்து 6 மாத காலத்துக்குள் அறிவிக்கப்படவேண்டும்.

(iii) ஏற்கனவே நிரந்தரமான உபகாரச் சம்பள உரித்துடைய ஒரு பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து, அவர் முதற்கண் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார்.

4. **சேவை நிபந்தனைகள்.**—புதிய முறைப்படி அரசினர் சேவைக்கு நியமிக்கப்படும் ஒருவரைப் பொறுத்தவரையில், உத்தியோக மொழிக் கொள்கை நோக்கத்தின் பொருட்டு—

(i) தகுதிகாண்/பரீட்சார்த்த காலம் 3 வருடங்களாக அமையும்.

(ii) அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை செயற்படுத்தற்பொருட்டு குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளை, ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ள பிரமாணங்களுக்கும் இனிமேல் ஆக்கப்படக்கூடிய பிரமாணங்களுக்கும் அமைய அவர் ஒழுக வேண்டும்.

(iii) தகுதிகாண்/பரீட்சார்த்த காலத்தில் சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டும்.

(iv) தகுதிகாண்/பரீட்சார்த்த காலமுடிவில் பதவியில் உறுதிப் படுத்தப்படுதல், ஏனைய விடயங்களுடன், I ந் தர, II ந் தர, III ந் தரப் பரீட்சைகளில் முறையே ஒரு வருடத்தில், இரண்டு வருடங்களில், மூன்று வருடங்களில் சித்தியடைதலைப் பொறுத்

ததாகும். (I ந் தர, II ந் தர பரீட்சைகளில் சித்தியடைதல், காரியத்துக்கேற்ப, ஒரு வருடத்தில் அல்லது இரண்டு வருடங்களில் ஆகும்). விதிக்கப்பட்ட காலங்களுள் இத்தேர்ச்சிப் பரீட்சைகளில் சித்தியடையத் தவறினால் உயர்ச்சிப் பணங்கள் இடைநிறுத்தப்படும் ; விதிக்கப்பட்ட காலத்திலிருந்து 6 மாத காலத்துக்குள் இப்பரீட்சையில் சித்தி எய்தாவிடின் இடைநிறுத்தம் செய்யப்பட்ட சம்பள உயர்ச்சிப் பணம் நிறுத்திவைக்கப்படும். அத்தகைய சம்பள உயர்ச்சிப் பண நிறுத்துதல் பரீட்சையில் சித்திஎய்தும் வரை அல்லது கீழ்க்காணும் (v) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் அமையும்வரை செயற்படும்.

(v) தகுதிகாண்/பரீட்சார்த்த கால முடிவில் விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சியை பெற்றிராவிடின் 120 ஆம், 121 ஆம் நிர்வாகப் பிரமாணங்களின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகும்.

(vi) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் அரசினர் சேவை ஆணைக்குழு விதிகள், நிருவாகப் பிரமாணங்கள், நிதி விதிகள், அமைச்சால் விடுக்கப்படும் கட்டளைகள், அரசாங்கத்தால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் கட்டளைகள் ஆகியவற்றிற்கமைய ஒழுக வேண்டும்.

(vii) ரூ. 2,820 ஆகிய சம்பளப் படிக்கு மேலே பதவி உயர்ச்சி அளிக்கப்படுதற்கு நியமதாரி ஒருவர் சி. பா. த. பத்திரத் தரத்தைய ஒரு பரீட்சையில் அல்லது உயர்ந்த ஒரு பரீட்சையில் சிங்கள மொழியில் அல்லது இலக்கியத்தில் சித்தியடைய வேண்டும். அங்ஙனம் சித்தியடையத் தவறுமிடத்து சம்பள உயர்ச்சிப் பணம் இடைநிறுத்தம் செய்யப்படும்.

(சிங்கள மொழிமூலம் சேர்க்கப்படும் அபேட்சகர்களைப் பொறுத்தவரையில் மேலுள்ள (iii), (iv), (v) ஆம் நிபந்தனைகள் அமையமாட்டா).

5. **தேவைப்படும் தகைமைகள்.**—விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்யவேண்டும் :—

(i) 1969 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 27 ந் திகதியன்று 23 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு அமையாது.

(ii) (அ) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில்

அல்லது

(ஆ) சிங்கள மொழி, எண்கணிதம்/கணிதம் ஆகியவை உட்பட ஆறு பாடங்களில், இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில்

அல்லது

(இ) சமமான அல்லது உயர்ந்த ஒரு பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் கீழைத்தேய சங்கீத தகுதித் தேர்வுப் பத்திரம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சமமான வேறு யாதேனும் தராதரப் பத்திரம் அல்லது அரசினர் நுண்கலைப் பாடசாலையால்/அரசினர் சங்கீதப் பாடசாலையால் வழங்கப்படும் கீழைத்தேய சங்கீத தராதரப் பத்திரம் அல்லது லங்கா காந்தர்வ சபையால் கீழைத்தேய சங்கீதத்தில் வழங்கப்படும் இறுதித் தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

(iv) குறைந்தபட்சம் 4 வருட படிப்பித்தல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**குறிப்பு.**—சிங்கள கிராமியப் பாடல்களில் சிறந்த அறிவும் நடனத்திலும் படிப்பித்தலிலும் அனுபவமும் பெற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் படிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ் (மு. கு.—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பெற்றுள்ள ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரமும் தொழில் தராதரப் பத்திரமும் அல்லது இவற்றில் ஏதாவதொன்று

(இ) விண்ணப்பதாரியின் கல்வித் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்கான தகுதி ஆகியவை பற்றி சமீப காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள். (குறிப்பு : அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்கள் இவ் உப பிரிவில் கேட்கப்பட்டுள்ள நிபந்தனைகளிலிருந்து தவிர்வு அளிக்கப்படுகின்றனர்).

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

8. அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படமாட்டா, விண்ணப்பப் படிவங்கள் கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட வேண்டும்.

9. அரசினர் சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்ப வேண்டும். பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட்டு விதிக்கப்பட்ட திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பகுதித் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டதென்றும் நியாயமான காரணங்களைக் காட்டி அதனை ஏற்றுக்கொள்ளும்படி அப்பகுதித் தலைவர் சிபார்சு செய்தாலன்றி, ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

10. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொண்டமை பற்றி அறிவிக்கப்படும். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைகளுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் அதுபற்றி நிரந்தரக் காரியதரிசிக்கு (பொது நிர்வாகக் கிளை) உடனே அறிவிக்க வேண்டும். இவ் ஏற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தமது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

டீ. ஜீ. தயாரத்ன,
நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

பொ. நி/22/93.
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆண்டு பெப்புருவரி மீ 5 ந் உ.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**கீழைத்தேய சங்கீத உதவிப் பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் (தெளிவாக) :————.
2. தபால் விலாசம் : ————.
3. 27.2.1969 அன்று உள்ளபடி
   சரியான வயது : வரு : மா : நா :
4. சாதியமும் அது எவ்வாறு பெறப்பட்டதென்பதும் : ————.
5. பின்வருவோர் பிறந்த இடம் :
   (அ) விண்ணப்பதாரி : ————.
   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
   (இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
   (ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.
6. (அ) கீழைத்தேய சங்கீதத்தில் பெற்றுள்ள தராதரப் பத்திரம் :——
   (ஆ) கீழைத்தேய சங்கீதத்தில் பெற்றுள்ள அனுபவம் :—

| பாடசாலையின்/கல்லூரியின் பெயர் | வகித்த பதவி | சேர்ந்த திகதி | விலகிய திகதி | சேவைக் காலம் | | | விலகியதற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | வரு. | மா. | நா. | |
| | | | | | | | |

7. கீழ்வரும் மொழிகளில் பெற்றுள்ள அறிவு :—
   (அ) சிங்களம் : ————.
   (ஆ) ஆங்கிலம் : ————.
8. கல்வி பயின்ற பாடசாலைகள், சங்கீத நிலையங்கள்,
   பல்கலைக்கழகங்கள் : ————.

9. தற்போதைய உத்தியோக் விபரங்கள் (ஆசிரியராயின், பதிவு இலக்கம், பாடசாலைப் பெயர், தற்போதைய வருடாந்தச் சம்பளம், சம்பள விகிதம், அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி ஆகியவற்றைக் கொடுக்க) :————.

10. யுத்த சேவை விபரங்கள், இருப்பின் (விலகிய அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்) :————.

11. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் (இனத்தவர்களல்லாதவர்) பெயர்களும் பதவிப் பெயர்களும். மூன்று நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் (மூலங்களல்ல) இணைக்கப்பட வேண்டும். அரசினர் உத்தியோகத்திலிருப்பவர்கள் இவற்றை அனுப்ப வேண்டியதில்லை.

12. வேறு யாதேனும் விபரங்கள் :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கிறேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்பட்டதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————————
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

2–410—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841

---

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### வட்டார வித்தியாதிகாரிகள் பதவிகள்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சில் ஏற்படும் வட்டார வித்தியாதிகாரிகள் பதவிகளுக்கு ஆண்களிடமும் பெண்களிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய அச்சடிக்கப்பட்ட படிவங்களிலே தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள், 1969 ஆம் ஆண்டு பெப்ரருவரி மாதம் 27 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக " நிரந்தரக் காரியதரிசி, கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சு (பொது நிர்வாகக் கிளை), மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

குறிப்பு (i) இப்பதவிக்கு விண்ணப்பம் செய்ய விரும்பும் ஒவ்வொருவரும் தான் ஆசிரியராகப் பதிவு செய்யப்பட்டுள்ள இலக்கம், பெற்றுள்ள பட்டம், பட்டப் பரீட்சைக்கான பாடங்கள், படிப்பித்தல் அனுபவம் ஆகிய விபரங்களைக் கொடுத்து, ஒரு படிவத்துக்கு, " கொழும்பு 2 மலாய் வீதியிலுள்ள கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு (பொது நிர்வாகக் கிளை) " எழுத்துமூலம் விண்ணப்பிக்க வேண்டும். படிவங்களுக்கான விண்ணப்பங்கள் 1969 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 23 ஆந் திகதிவரை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். அத்தகைய விண்ணப்பங்கள் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பொ. நி. 25/15 என்ற இலக்கம் இடப்பட வேண்டும். விண்ணப்பத்துடன் சொந்த விலாசமிடப்பட்ட, முத்திரை ஒட்டப்படாத நீண்ட உறையும் அனுப்பப்பட வேண்டும். நேரில் வரும் எவருக்கும் படிவம் வழங்கப்படமாட்டாது.

குறிப்பு (ii) விண்ணப்பப் படிவமேனும் அது பற்றிய எக்கடிதமேனும் அஞ்சல் செய்யப்பட்டபின் காணமற்போனது அல்லது தாமதிக்கப்பட்டது என்ற எவ்வித குற்றுச்சாட்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. தமது விண்ணப்பங்களை கடைசி நாள்வரை தாமதிக்கும் விண்ணப்பதாரிகள் தாமாகவே தமக்கு ஆபத்தைத் தேடுபவராவர்.

2. **சம்பளம்.**— இப்பதவிக்கான சம்பள விகிதம் பின்வருமாறுகும் :—

பட்டதாரிகளுக்கு :

ரூ. 3,420—4 × 120--8 × 180—6 × 240—ரூ. 6,780, வருடாந்தம் ரூ. 4,080/-, ரூ. 4,800/-, ரூ. 5,580/- ஆகிய வருடாந்தச் சம்பளங்கள் பெறுமுன் திறமைக் கடப்புப்படிகள் உண்டு.

பட்டதாரிகள் அல்லாதவர்களுக்கு :

ரூ.2,580—11 × 120—5 × 180– ரூ.4,800/- வருடாந்தம் ரூ.3,300/- ரூ.4,800/- ஆகிய வருடாந்தச் சம்பளங்கள் பெறுமுன் திறமைக் கடப்புப்படிகள் உண்டு.

3. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :—**

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பள பிரமாணக்குறிப்பின்கீழ் இளைப்பாற்று உரித்துடையனவையுமாகும். பெண்ணொருவர் நியமிக்கப்படுமிடத்து, அவர் சேமலாப நிதி நன்மைகளுக்கு உரித்துடையவராவர் ; இந்நோக்கத்துக்கென அவர் தனது சம்பளத்தில் 5 நூற்றுவீதமும் அரசினர் சேவை சேமலாப நிதிக்கு கட்டணம் செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படுபவர், அரசினரின் கீழ் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான சேவையில் இல்லாவிடின் 3 வருட காலத்துக்கு, காரியத்துக்கேற்ப, தகுதிகாண் அல்லது பரீட்சார்த்த முறையில் நியமிக்கப்படுவர்.

(ii) பெண் உத்தியோகத்தர் ஒருவர், சேமலாப நிதிக்குத் தொடர்ந்து கட்டணம் செலுத்தவா அல்லது இளைப்பாற்றுச் சம்பள நிதிக்கு மாற்றப்படவா விரும்புகிறார் என, 10 வருட மொத்த சேவையைப் பூர்த்திசெய்யுமுன் எந் நேரத்திலேனும் அறிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ் அல்லது சேலமாப நிதி நலன்களைக்கொண்ட ஒரு பதவியில் அல்லது இவ்விரண்டின் கீழும் ஏற்கனவே 10 வருட சேவை அவர் பூர்த்தி செய்திருப்பின், நியமிக்கப்படும். ஆறு மாத காலத்துக்குள் தனது விருப்பத்தை அவர் தெரிவிக்க வேண்டும்.

(iii) தெரிவு செய்யப்படுபவர், நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் அரசினர் விதிகளிலும் பிரமாணங்களிலும் ஒரு பரீட்சையில் சித்தியடைய வேண்டும் ; அரசினர் சேவை ஆணைக்குழு விதிகளிலும் நிர்வாகப் பிரமாணங்களிலும் ஒரு வினாப்பத்திரமும் நிதி விதிகளில் இன்னொரு வினாப்பத்திரமும் கல்விச் சட்டத்தில் இன்னொரு வினாப்பத்திரமுமாக மேற்குறித்த பரீட்சை 3 வினாப்பத்திரங்களைக் கொண்டதாக அமையும். அங்ஙனம் சித்தியடையத் தவறுமிடத்து அவருடைய சம்பள உயர்சிப் பணம் பிற்போடப்படும். விதிக்கப்பட்ட காலத்துக்கு மேலதிகமாக (இப்பரீட்சையில் சித்தி எய்துதற்கு) ;எடுக்கப்படும் காலம் சம்பளம் பிற்போடப்பட்ட காலமாகக் கருதப்படும்.

(iv) தெரிவு செய்யப்படுபவர், இரண்டாவது திறமைக் கடப்புப்படிக்கு மேலே பதவி உயர்ச்சி அளிக்கப்படமுன் நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பின் II ந் தர உத்தியோகத்தர் ஆகியோருக்கான தேசிய மொழிகளிலான பரீட்சையில் (தமிழ் உத்தியோகத்தர்கள்) சிங்களத்திலும் (சிங்கள உத்தியோகத்தர்கள்) தமிழிலும் தகைமை பெறவேண்டும். இரண்டாவது திறமைக்கடப்புப்படி மட்டத்தைத் தாண்டியவர்கள் மூன்றுவது திறமைக் கடப்புப்படிக்குமேல் செல்லுமுன் குறித்த தகைமையைப் பெறவேண்டும். அங்ஙனம் சித்தியடையத் தவறுமிடத்து அவருடைய சம்பள உயர்ச்சிப் பணம் பிற்போடப்படும். விதிக்கப்பட்ட காலத்துக்கு மேதிலகமாக (இப்பரீட்சையில் சித்தி எய்துதற்கு) எடுக்கப்படும் காலம் சம்பளம் பிற்போடப்பட்ட காலமாகக் கருதப்படும்.

(v) உத்தியோகத்தர் ஒருவரை மேலும் சேவையில் வைத்திருத்தற்கு அவர் தகுதியற்றவரெனக் கருதப்படின் தகுதிகாண்/பரீட்சார்த்த காலத்தில் அல்லது அக்கால முடிவில் சேவையிலிருந்து விலக்கப்படலாம்.

(vi) தெரிவு செய்யப்படுபவர் தீவின் எப்பகுதியிலும் கடமை புரிய வேண்டும்.

4. **தேவைப்படும் கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் :—**

விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்வதாகத் திருப்திகரமாக நிரூபிக்க வேண்டும் :—

(அ) 1969 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 27 ஆந் திகதியன்று 23 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கும் வித்தியாதிபதி முகாமைப் பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்களுக்கும் இவ்வயதுக் கட்டுப்பாடு அமையாது.

(ஆ) பட்டதாரிகளைப் பொறுத்தவரையில்—
குறைந்தபட்சம் 3 வருட படிப்பித்தல் அனுபவம் பெற்றுள்ள பயிற்றப்பட்ட பட்டதாரியாகவேனும் 5 வருட படிப்பித்தல் அனுபவம் பெற்றவரும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சர்வகலாசாலைப் பட்டதாரியாகவும் இருக்க வேண்டும்.

பட்டதாரிகள் அல்லாதவர்களைப் பொறுத்தவரையில்—

பயிற்றப்பட்ட ஆசிரியராக 10 வருட சேவை புரிந்த I ந் தர பயிற்றப்பட்ட ஆசிரியராக அல்லது ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியராக 15 வருட சேவைபுரிந்த I ந் தர ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியராக இருக்கவேண்டும்.

(இ) சி. பா. த. ப. அல்லது க. பொ. த. ப. (சாதாரணதர) பரீட்சையில் அல்லது வேறு யாதேனும் உயர்ந்த பரீட்சையில் சிங்கள/தமிழ் மொழியில் அல்லது சிங்கள/தமிழ் இலக்கியத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(ஈ) சிறந்த நற்குணம் உடையவராகவும் தேகாரோக்கியம் உடையவராகவும் இருக்க வேண்டும்.

5. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும்.:—

(i) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்காகக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டமாட்டா)

(ii) பெற்றுள்ள கல்வித் தராதரப் பத்திரங்களும் தொழில் தராதரப் பத்திரங்களும்.

(iii) சமீப காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள் (ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்கள் இவற்றை அனுப்ப வேண்டியதில்லை).

(iv) சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய பரீட்சைத் தராதரப் பத்திரம் அல்லது வேறு யாதேனும் (இதனை நிரூபிக்கும்) சான்று.

(அரசினர் சேவையில் உள்ளவர்கள் நற்சாட்சிப் பத்திரங்களைச் சமர்ப்பிப்பதிலிருந்து மட்டுமே தவிர்வு அளிக்கப்படுகின்றனர்)

6. இவ்விடயம் சம்பந்தமான விண்ணப்பங்களேனும் வேறு யாதேனும் கடிதங்களேனும் கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) அனுப்பப்பட வேண்டுமேயொழிய அமைச்சில் கடமை புரியும் எவ்வுத்தியோகத்தரின் பெயருக்குமல்ல.

7. அரசினர் செய்திமடலின் I ம் பகுதி II ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையும் அரசினர் சேவையில் உள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளுக்கும் உங்கள் கவனம் கோரப்படுகின்றது.

8. அரசினர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்ப வேண்டும். அரசினர், வித்தியாதிபதி முகாமைப் பாடசாலை ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு உரிய பிரதேச வித்தியாதிபதி/பிரதம வித்தியாதிகாரி மூலம் அனுப்ப வேண்டும். பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட்டு விதிக்கப்பட்ட திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பகுதித் தலைவரால் பெற்றுக்கொள்ளப்பட்டதென்றும் நியாயமான காரணங்களைக் காட்டி அதனை ஏற்றுக் கொள்ளும்படி அத்தலைவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அங்ஙனம் அவை பெற்றுக் கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் அது பற்றி நிரந்தர காரியதரிசிக்கு உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

டீ. ஜீ. தயாரத்ன,
நிரந்தரக் காரியதரிசியும்
மகா வித்தியாதிபதியும்.

தொடரெண் ; பொ. நி. 25/15.
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 6 ந் திகதி.

2-408—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841

---

## இலங்கை இராணுவத்தில்
## உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள்

இலங்கை இராணுவத்தில் விவசாய உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் நிரந்தர அரசாணை அமர்வு செய்யப்பட்டு லெப்டினனட் பதவியில் அமர்த்தப்பட்டு இலங்கை இராணுவ பொது சேவைப் படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

3. (அ) சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பகாரருக்கு 1961 ஆம் ஆண்டின் இராணுவ வேதனச் சட்டக் கோவையின்படி சம்பளமும் சகாயப்படியும் வழங்கப்படும். மேஜர் பதவிவரை உள்ள சம்பள வீதம் பின்வருமாறு :—

லெப்டினனட் : வருடம் 4,860 ரூபாவில் இருந்து 5,580 ரூபாவரை. வருடம் ரூபா 180 ஆன இரண்டு பதவி ஏற்றமும், ரூபா 360 ஆன ஒரு பதவி ஏற்றமும்.

கப்டன் : வருடம் 6,660 ரூபாவில் இருந்து 7,740 ரூபாவரை. ரூபா 180 ஆன ஆறு சம்பள ஏற்றமும்.

மேஜர் : வருடம் 8,820 ரூபாவில் இருந்து 9,900 ரூபாவரை. ரூபா 180 ஆன ஆறு சம்பள ஏற்றமும்.

(ஆ) கீழ்க்காணப்படும் சகாயப்பணமும் கொடுக்கப்படும்.

(i) அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்டபடி பொது உத்தியோகத்தர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படியும் வாழ்க்கைச் சிறப்புப் படியும் உத்தியோகத்தர்களுக்கான வாசஸ்தானம் ஒன்றில் இடமளிக்கப்படாத உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும். வாசஸ்தானங்களில் இடமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இப்படிகள் வழங்கப்படமாட்டாது.

(ii) விவாகமான உத்தியோகத்தர்களுக்கு சேவை அல்லது அரசாங்கத்தினால் வழங்கப்படும் விவாக இல்லங்கள் கொடுக்கப்படாதவிடத்தும் விவாகமாகாத உத்தியோகத்தர்களுக்கு நியமனத்திற்கேற்ப வாசஸ்தல இடவசதிகள் அளிக்கப்படாதவிடத்தும் பொது உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டபடி வீட்டு வாடகைகள் வழங்கப்படும்.

(iii) விவாகமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளே வசிக்கும்படி ஆணையிடப்பட்டால் உள்ளே வசிக்கும் ஒவ்வொரு 24 மணித்தியாலத்திற்கும் ரூபா 1.50 வீதம் பிரிந்திருக்கைப்படி வழங்கப்படுவதுடன் உத்தியோகத்தர்களுக்கான வாசஸ்தலத்தில் இடவசதி அளிப்பதுடன் உணவும் கொடுக்கப்படும். வாழ்க்கைச் செலவுப்படியும், சிறப்புப்படியும் உணவுப்படியும், உறையகப்படியோ வழங்கப்படமாட்டாது.

(iv) மற்றைய படிகள் (அணியடுக்கு, கோலவுடை பேணல் மற்றும் சேவையாளர் படிகள்) 1961 ஆம் ஆண்டின் இராணுவ வேதனச் சட்டக் கோவையின்படி வழங்கப்படும்.

(v) பிரயாணப்படிகள், உணவுச்செலவுகள், தங்குமிட மைற்கூலி, இடமாற்றக்கூலி ஆகியவை அரசாங்கத்தினால் பொது உத்தியோகத்தருக்கு விதிக்கப்பட்டபடி வழங்கப்படும்.

(இ) உத்தியோகத்தர்கள் கீழ்க்காணப்படும் ஒழுங்குவிதிகளின்படியும், அவரவர்களின் சம்பளம், சேவைக்கேற்பவும் ஆளப்படும்.

(i) 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ந் திகதியிடப்பட்ட 12,395 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1961 ஆம் ஆண்டின் இராணுவ வேதனச் சட்டக்கோவையின் பிரகாரமும் காலத்திற்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களுக்குமிணங்க.

(ii) 1949 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 28 ந் திகதி 10,028 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1961 ஆம் ஆண்டின் இராணுவ வேதனச் சட்டக்கோவையின் பிரகாரமும் காலத்திற்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களுக்கு மிணங்க.

(iii) 1961 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 28 ஆம் திகதியிடப்பட்ட 12,680 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1961 ஆம் ஆண்டின் இராணுவ உபகாரச் சம்பளப் பணிக்கொடைச் சட்டக் கோவைக்கும் காலத்துக்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களுக்குமிணங்க.

மற்றும் ஏனைய தகவல்கள் கொழும்பு, இராணுவத் தலைமை நிலையத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

4. விண்ணப்பகாரர்கள் கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(அ) **தேசிய இனம்.**—இலங்கைப் பிரசையாகவிருத்தல் வேண்டும்.

(ஆ) **வயது.**—விண்ணப்பகாரர்கள் 1969.3.1 ந் திகதி 28 வயதுக்குட்பட்டவராயிருத்தல் வேண்டும்.

(இ) **கல்வித்தகைமையும் உயர்தொழில் தகைமையும்.**—விண்ணப்பகாரர்கள் கீழ்காணும் தகைமையையுடையவர்களாயிருத்தல் வேண்டும்.

(ஈ) **வைத்திய தகைமைகள்.**—விண்ணப்பகாரர்கள் இராணுவ வைத்தியப் பரிசோதனைக்குத் தோற்றவேண்டும்.

5. விண்ணப்பங்கள் கீழ்கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் எழுதப்பட்டு 1969.3.1 ந் திகதியன்று மத்தியானம் 12 மணிக்குப் பிந்தாமல் இராணுவத் தலைமை நிலையம், தபால் பெட்டி இலக்கம் 553, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தையுடைய கடிதவுறையிலும் "இராணுவ விவசாய உத்தியோகத்தருக்கான விண்ணப்பம்" என எழுதப்படல் வேண்டும். முடிவு தேதிக்குப்பின் இத்தலைமை நிலையத்தில் கிடைக்கும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படமாட்டாது.

6. ஏற்கனவே அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பகாரர்கள் தமது விண்ணப்பங்களைத் தம் திணைக்களத் தலைவருக்கூடாகச் சமர்ப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பகாரர்கள் தெரிவு செய்யப்படின் அவர்கள் சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்ற சான்றிதழ் ஒன்றும் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும். இராணுவ பணிக்கொடை சேவைக்கு சேர்த்துக்கொள்ளுவதற்குத் தம் திணைக்களத் தலைவரினால் கொடுக்கப்பட்ட சான்றிதழ் அனுப்பப்படல் வேண்டும். இவ்வாறு செய்யப்படாவிடின் இராணுவ பணிக்கொடைக்குச் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.

7. விண்ணப்பங்களுடன் இவைகளின் பிரதிகள் இணைத்தனுப்புதல் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) கல்வித் தகைமைகளையும் உயர்தொழில் தகைமைகளையும் நிரூபிக்கும் சான்றிதழ் ;

(இ) விண்ணப்பக்காரருடன் பரிச்சயமுடைய பொறுப்புவாய்ந்தவர்களினால் வழங்கப்பட்ட குறைந்தபட்சம் இரு சான்றிதழ்கள்.

8. மேலேகூறிய நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யும் விண்ணப்பகாரர்களிலிருந்து தொடக்கத் தெரிவுசெய்யப்படும். தெரிவுசெய்யப்படும் விண்ணப்பகாரர்கள் இதன்பின் இறுதித் தெரிவு, தெரிவுசெய்யப்பட்டவர்களிலிருந்து பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச்சுவினால் நியமிக்கப்படும் தேர்வுச் சபையொன்றினால் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும். தேர்வுச் சபைகளினால் நேர்முகப் பரீட்சைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகளின் இடம், நேரம், திகதி என்பன எழுத்துமூலம் அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சைகள் கொழும்பில் நடாத்தப்படும். இத்தொடர்பில் எவ்விதப் பிரயாணச் செலவோ அல்லது பிற செலவுகளோ இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட மாட்டாது.

9. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர்கள் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கென விசேடமாக அரசாங்க மொழியதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஏற்கனவே செய்யப்பட்ட விதிகளுக்கும் அல்லது இனிமேல் செய்யப்படும் விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

10. சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரிகள் தமது அடிப்படைச் சம்பளத்தில் 4 விகிதமானதைத் தமது உதவுதொகையாக படைக்கலந்தாங்கு சேவைகளின் விதவை அநாதை உபகாரச்சம்பள நிதிக்கு வழங்குவதற்கு எழுத்துமூலம் தமது சம்மதத்தைத் கொடுத்தல் வேண்டும்.

எம். எல். டி. ஏ. பெரேரா,
கேர்ணல்,
இராணுவத் தளபதிக்காக.

1969 ம் ஆண்டு பெப்ரவரி மீ 7 ந உ.

**இலங்கை இராணுவத்தில் விவசாய உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் (தடித்த எழுத்துக்களில்) :————.

2. தேசிய இனம் (பரம்பரை வழியான இலங்கைப் பிரசையா அல்லது பதிவுமூலம் இலங்கைப் பிரசையா என்பதைக் குறிப்பிடவும். பதிவு மூலம் இலங்கைப் பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடவும்) :————.

3. முகவரி : வீட்டுவிலாசம் :————.
அலுவலகத்து விலாசம் :————.

4. பிறந்த திகதி : 1969.3.1 ஆம் திகதிக்கு
வருடம் :————.
மாதம் :————.
நாள் :————.

5. பிறந்த இடத்தின் பெயரும் தற்போதைய விலாசமும் :————.

| | முழுப்பெயர் | பிறந்த இடம் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

6. நீர் விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா? :————.

7. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உடற்பயிற்சி விளையாட்டுக்களில் நீர் பெற்ற தனிச்சிறப்புகள் :————.

8. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உமக்குரிய சிறப்பாகப் பெற்ற பிற செயல்கள் :————.

9. இலங்கை சுயேச்சைப்படை, இலங்கைச் சாரணர்படை, இலங்கை மாணுக்கர் படை, முதலிய சுயேச்சை நிறுவகங்களில் இருந்திருப்பின் அவற்றின் விபரம் :————.

10. இந்நியமனம் சம்பந்தமாக உமக்கு வேறு என்ன விசேட தகைமைகள் உண்டோ :————.

11. இதற்குமுன் படைக்கலந்தாங்கு சேவைகளில் ஏதாவது ஒன்றிற்கு விண்ணப்பம் செய்திருப்பின் அதன் முடிவுகள் :————.

12. கீழ்க்காணும் பாடசாலை அல்லது சர்வகலாசாலை விபரங்களைத் தருக :————.

| பாடசாலையின் அல்லது சர்வகலாசாலையின் பெயர் | சேர்ந்த திகதி | விலகிய திகதி | பொது/உயர்தொழிற் கல்வி சித்தியெய்திய பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

13. பாடசாலையை அல்லது சர்வகலாசாலையை விட்டு விலகிய பின் நீர்செய்த தொழில் விபரங்களைக் கீழே தருக :————.

| வேலைகொள்வோரின் பெயர் | செய்த தொழில் | சேவைசெய்த காலம் | |
|---|---|---|---|
| | | தொடக்கம் | வரை |
| | | | |

14. குணச்சான்றிதழ் வழங்கியவர்களின் பெயர்களும் முகவரிகளும் :————.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

————.
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

2–418—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841

## வன திணைக்களம்

### படம் பிடிப்பு-ஆய்வுகூட உதவியாளர் பதவி

வன திணைக்களத்தின் ஆராய்ச்சிக் கல்விப் பகுதியில் ஒரு படம் பிடிப்பாளர்—ஆய்வு கூட உதவியாளரைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுக்கப்படும் மாதிரி விண்ணப்பப்பத்திரத்தில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் 1969 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 1 ம் திகதியோ அல்லது அதற்கு முன்போ கிடைக்கக்கூடியதாக பதில் வனபாதுகாவல் அதிபர், அ. பெ. இல : 509, கொழும்பு—2 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

2. **சம்பள விகிதம்.**—வருடம் ரூ. 1,620–120–3,780 (த.த.ரூ: 2,820க்கு முன்)

3. **அமர்த்தும் நியதிகள்.**—பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பளமுடையதுமாகும்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் கீழ்க்காணும் தகைமை உடையவர்களாக இருக்கவேண்டும்.

(அ) எண்கணிதமும் இரசாயனமும் பாடங்களாக அமைந்த சிரேஷ்ட கல்வித் தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான தராதரப்பத்திரம் உடையவராகவோ

அல்லது

எண்கணிதமும் இரசாயனமும் பாடங்களாக அமைந்த (சாதாரண) பொதுக்கல்வித் தராதரப் பரீட்சையில் (ஆறு பாடங்கள் இரண்டு தவணைக்குள்) சித்தியடைந்தவராகவோ இருக்கவேண்டும்.

(ஆ) படப்பிடிப்பு வேலைகளும் படப்பிடிப்பு சம்பந்த செய்முறை அனுபவமும் அவசியம்.

(இ) இருட்டறையில் படம் கழுவும் இரசாயனங்களின் அனுபவம் 5 வருடங்கட்கு குறைவில்லாமலும், புகைப்படச் சுருள், கண்ணாடிவிளக்குப்பட்டம் முதலியவற்றில் ஆழ்ந்த அறிவுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஈ) நுணுக்கொளிப் புகைப்படப்பிடிப்பிலும், இயக்கப்புகைப்படக் கருவி இயக்குதலிலும் ஆற்றல் உடையவராக இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் கீழ்க்காணும் பத்திரங்களின் பிரதிகளை (மூலப் பிரதியல்ல) விண்ணப்பத்தோடு இணைக்க வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுப்பத்திரம் (ஞானஸ்ஞானம் பெற்ற பத்திரங்களோ அல்லது உதவி பெறும் பாடசாலைப் பிரமாணங்களுக்காக கொடுக்கப்படும் பதிவுப்பத்திரங்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) கல்வித் தகைமைகளின் சான்றிதழ்.

(இ) விண்ணப்பதாரரின் ஒழுக்கம் குறிப்பிட்ட பதவிக்கு அவர் பொருத்தமானவரா என்பதற்கான சமீபத்தில் பெறப்பட்ட 3 நற்சாட்சிப்பத்திரங்கள் (ஏற்கனவே பொதுச்சேவையில் இருப்பவர்கள் இப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தேவையில்லை)

6. இவ் அரசாங்க வர்த்தமானியில் பகுதி I ம் பிரிவு II ன் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

7. குறிப்பிட்ட திகதிக்குப் பின் வரும் மனுக்கள் கவனிக்கப்படமாட்டா.

8. விண்ணப்பங்களோ அல்லது இப்பதவி சம்பந்தமான வேறு எவ்வித கடிதங்களோ பதில் வன பாதுகாவல் அதிபருக்கே அனுப்பப்பட வேண்டும். இத் திணைக்களத்தைச் சேர்ந்த வேறு எந்த தனிப்பட்டவருக்கு அனுப்பக்கூடாது.

டபிள்யூ. ஆர். எச். பெரேரா,
பதில் வன பாதுகாவல் அதிபர்.

வனபாதுகாவல் அதிபர் காரியாலயம்,
அ. பெ. இல : 509,
கொழும்பு 2,
1969 ம் ஆம் சனவரி மீ 30 ந் உ.

## வன திணைக்களம்
### விண்ணப்பப் பத்திரம்

1. முழுப்பெயர் (உறுப்பு எழுத்துக்களில்) : ————.
2. விலாசம் : ————.
3. பரம்பரையாகவோ அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கையரா : ——.
4. (a) பிறந்த திகதி : ————.
   (b) 1.3.69 ல் வயது.——— வருடம் : ——— —மாதம் : ————.
5. ஏற்கனவே பதவியில் இருந்தால் அவ்விபரம் : ————.
6. ஆகக்கூடிய கல்வித்தராதரம் : ————.
7. முன்பு தொழில் புரிந்திருந்தால் அவற்றின் விபரம் :————.
8. விஷேச தராதரம் இருப்பின் அதன் விபரம் : ————.

————,
திகதி : ————. விண்ணப்பதாரரின் ஒப்பம்.

2–397—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841

---

## காணிக்கமிசனர் திணைக்களம்
### விவசாயக்குடியேற்றத்திட்ட அதிகாரிகள் பதவிகள்

காணிக்கமிசனர் திணைக்களத்தில் II ம் தர விவசாயக்குடியேற்றத்திட்ட பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள்யாவும் இதன் கீழ் காட்டப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு ஏற்ப தயாரித்து சரியாக நிரப்பி 1969.3. 5ம் திகதிக்கு முன்பாக அல்லது அன்றையத்தினம் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் காணிக்கமிசனர், த. பெ. 500, கொழும்பு 1 என்ற முகவரிக்கு அனுப்பப்படல்வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தைப்போலல்லாத,விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

2. **சம்பளமுறை** — IIம் தரம்—வருடத்திற்கு ரூபா 1,380–120—3,780. I ம் தரம்—வருடத்திற்கு ரூபா 3,180–120–180–240 ரூபா 5,820

**குறிப்பு.**—சர்வகலாசாலை விவசாயப் பட்டதாரிகளும், விவசாயத்தில் செயல் முறைப் பயிற்சியனுபவமுள்ள பட்டதாரிகளும் 1,380–120-–3,780 ரூபா சம்பளப் படியில் 1,620 ரூபாச் சம்பள் அடிப்படையில் வைக்கப்படுவர்.

3. **வயதுக்கட்டுப்பாடு** — விண்ணப்பதாரிகள் இலங்கையராயிருக்க வேண்டும். 1969, 3 ம் மாதம் 5 ம் திகதிக்கு 20 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவர்களாயிருத்தல் வேண்டும். (தற்போது இந்த இலாக்காவில் கடமைபார்க்கும் I ம் தர காணி அபிவிருத்தி மேற்பார்வை ஒவர்சியர்களுக்கு இந்த வயதுக்கட்டுப்பாடு செல்லுபடியாகாது.)

4. **கல்வித்தகைமைகளும் வேறு தகைமைகளும்,**–விண்ணப்பதாரிகள்,

(i) (அ) ஏற்றுக்கொள்ளப்பட்ட கலாசாலை விவசாயக்கலாசாலைப் பரீட்சையில்

(ஆ) ஏற்றுக்கொள்ளப்பட்ட கலாசாலை விவசாயச்செயல்முறை அனுபவமுள்ள கலாசாலைப்பட்டப்பரிட்சையில்.

(இ) சிரேஸ்ட தராதரப்பத்திரப்பரீட்சையில்.

(ஈ) இரு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ் பாஷையுடன் எண்கணிதம், கணிதம் உட்பட பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் பரீட்சையில் (சாதாரணம்) அல்லது

(உ) அதற்குச்சமமான அல்லது அதற்கு உயர்வான பரீட்சையொன்றில் சித்தி எய்தியவராயிருத்தல் வேண்டும். (விஞ்ஞானபாடங்களில் சித்தியெய்தியவர் களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.) அத்துடன்

(ii) விவசாயப்பாடசாலையில் சிரேஸ்ட்ட தராதரப்பத்திரம் உடையவராயிருத்தல்வேண்டும். (கமத்தொழில் சாதனுபாடசாலை தராதரப்பத்திரமல்ல)

(iii) 1943 இல 2 க் கொண்ட உணவு உற்பத்தி (தோட்டத்து) சட்டத்தின் கீழ் உணவு உற்பத்தி (தோட்டம்) மேற்பார்வை அதிகாரியாக அனுபவமுடையவர்கள் அல்லது

(iv) உணவு உற்பத்தி அதிகாரியாயிருந்த அனுபவம் அல்லது

(v) புதிய ரப்பர் நடுகைத்திட்டத்தின் கீழ் மாவட்ட உத்தியோகத்தராயிருந்தோர் அல்லது

(vi) கல்லோயாப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச்சபை தொழில் நுட்பக் கல்லூரியில் இரண்டுவருடம் விவசாயப்போதனு பயிற்சி பெற்றோர்.

**குறிப்பு** (1) கல்வி இலாக்காவால் வழங்கப்பட்ட கனிஸ்ட பாடசாலைத் தராதரப்பத்திரத்தையுடையோரும் விவசாயப்பாடசாலையில் பயிற்சிபெற்றதை ஒப்புவிக்கக்கூடியசான்றிதழை உடையவர்களும் 1 ம் தரத்தில் 4 வருட சேவைபுரிந்தோரும் வருடமொன்றுக்கு ரூபா 1,254 ஐ வேதனமாகப் பெறும் வேலையும் நடத்தையும் திருப்திகரமாயுள்ள 1 ம் தர காணி அபிவிருத்தி மேற்பார்வையாளர்கள் விண்ணப்பிக்கலாம்.

5. இப்பதவிகள் நிரந்தரமானதும், இளைப்பாறல் சம்பள உரிமையுடையதுமாகும். அத்துடன் விதவை அனுதைகள் சம்பளத்திட்டத்திற்கு உதவுதொகையும் கொடுக்கவேண்டும். நியமனங்கள் 3 வருட தகுதி கால எல்லைக்குட்பட்டதாகும். (தெரிவுசெய்யப்பட்ட திணைக்கள உத்தியோகத்தர்கள் முதலில் குறித்தகாலத்திற்கு பதிற்கடமைபுரிய நியமிக்கப்படுவர்.)

6. தெரிவுசெய்யப்படுவோர் உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ள முன்னர் உடற்தகுதியுடையோரா என்பதை அறியும்பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட வைத்திய உத்தியோகத்தர்களிடம் சென்று பரிசீலனைசெய்து தகுதியுடையவர்களெனத் தீர்ப்பளிக்கப்படல் வேண்டும். அத்துடன் தெரிவு செய்யப்படுவோர் தீவின் எப்பகுதியிலும் சேவை செய்யத்தகுதியுடையவராயிருத்தல் வேண்டும்.

7. தெரிவு செய்யப்படுபவர்கள் மோட்டார் பைசிக்கல் போன்ற வாகனத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அரசாங்க நிதிப்பிரமாணத்திற்கு ஏற்ப அவர்களுக்கு போக்கு வரத்துப்பணம் கொடுக்கப்படும்.

8. தெரிவுசெய்யப்படுபவர்கள் ரூபா 1,500 ற்கு பிணைப்பணச் சான்றிதழ்களுக்கு உட்படல் வேண்டும்.

9. அரசாங்கத்தின் மொழிக்கொள்கைக்கு ஏற்ப அக்கொள்கையை அமுலாக்குவதற்கு தற்போது அமுலிலிருக்கும் சட்டங்களையும் இனிமேல் கொண்டுவரப்போகும் சட்டங்களையும், விசேடமாக 1956 ம் ஆண்டைய 33 ம் இலக்கச்சட்டத்தையுடைய அரசாங்க மொழிச்சட்டத்திலுள்ள சட்டங்களுக்கும் பிரமாணங்களுக்கும் கட்டுப்பாடுடையவர்களாக தெரிவு செய்யப்படுவோர் தெரிவு செய்யப்படுவர்.

10. தனது குணநலன்கள் சம்பந்தமாக அண்மையில் பெற்றுள்ள நற்சாட்சிப்பத்திரங்கள் இரண்டை (பிரதிகள்) விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்துடன் அணைத்து அனுப்புதல் வேண்டும்.

11. விண்ணப்பம் கிடைத்ததாக அறிவிக்கப்படமாட்டாது.

12. இந்த வர்த்தமானியில் I ம் II ம் பகுதியில் முதலாவதாக வெளியாகும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு உரிமையான பொது நிபந்தனைகளையும் விண்ணப்பதாரிகள் பார்க்கும்படி வேண்டப்படுகின்றனர்.

கே. என். வீரக்கொடி,
காணிக் கமிசனர்

காணிக்கமிசனர் திணைக்களம்,
தபால்பெட்டி 500
கொழும்பு 1,
1969.ம் ஆம் பெப்புருவரி மீ 5 ந் உ.

2–300—14.2.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,841.

## காலி மாவட்டம், பெந்தோட்டை வலல்லாவிட்டிக்கோறளை கிழக்குக் காரியாதிகாரியின் பகுதியில் பிட்டிகல வய்ஹேன கிராமசபைப் பிரதேசத்துக்கு மரண விசாரணை அதிகாரி ஒருவரை நியமித்தல்

காலி மாவட்டம், பெந்தோட்டை வலல்லாவிட்டிக்கோறளை கிழக்குக் காரியாதிகாரியின் பகுதியில் பிட்டிகலே வய்ஹேன பிரதேசத்துக்கு மரண விசாரணை அதிகாரி பதவிக்காக இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் பத்திரத்தை அடிப்படையாகக்கொண்டு தயாரித்த விண்ணப்பப் பத்திரத்தை 1969 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பெந்தோட்டை வலல்லாவிட்டிக்கோறளைக் காரியாதிகாரிக்குக் கிடைக்கக் கூடியதாகக் கீழே காட்டப்பட்டுள்ள விலாசத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

"பிரிவுக் காரியாதிகாரி, பெந்தோட்டை வலல்லாவிட்டிக் கோறளை கிழக்கு, அல்பிட்டியா".

2. இப்பதவி வேதனமற்றது. ஆயினும் மரண விசாரணை ஒன்றுக்கு ரூபா 7.50 படியாக வழங்கப்படும்.

3. **வேண்டிய தகைமைகள்.**—

(அ) நல்லொழுக்கமும், நற்சுகதேகியுமாயிருத்தல் வேண்டும்.

(ஆ) காலி மாவட்டம், பெந்தோட்டை வலல்லாவிட்டிக்கோறளைக் காரியாதிகாரியின் பகுதியில் பிட்டிகல வய்ஹேன கிராமசபைப் பிரதேசத்தில் நிரந்தரமாய் வசிப்பவராயிருத்தல் வேண்டும்.

(இ) (1) 1925 க்கும் 1944 க்கும் இடைப்பட்ட காலத்துள் பாடசாலை விடுகைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது சிங்கள பாஷையுடன் கல்வித் திணைக்களத்தின் கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது,

(2) சிங்கள பாஷையுடன் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்கு உயர் பரீட்சையில் சித்தியடைந்துள்ளமையை நிரூபிப்பதற்கு அத்தாட்சிப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) அரசாங்கத்தில் அல்லது ஸ்தல ஸ்தாபன அலுவலகங்களில் கடமையாற்றுபவரல்லாதிருத்தல் வேண்டும்.

(உ) விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதிக்கு 30 வயதுக்குக் குறையாமலும் 60 வயதிற்கு மேற்படாதவராயுமிருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பப் பத்திரங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பத்திரங்களின் பிரதிகளையும் அனுப்பிவைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்,

(ஆ) பெற்றுள்ள உயர்தகுதி சம்பந்தமான பத்திரம்,

(இ) நடத்தைச் சம்பந்தமாகச் சமீபத்தில் பெற்றுக்கொண்ட இரு அத்தாட்சிப்பத்திரங்கள்.

5. விண்ணப்பப்பத்திரம் கிடைத்தமை அறிவிக்கப்படமாட்டாது.

பீ. எ. ரி. குணசிங்க,
அரசாங்க அதிபர்,
காலி மாவட்டம்.

1969 ம் ஆண்டு பெப்பிரவரி மீ 1 ந வ.

### மாதிரி விண்ணப்பப்பத்திரம்

**காலி மாவட்டம், பெந்தோட்டை வலல்லாவிட்டிக் கோறளை கிழக்குக் காரியாதிகாரியின் பகுதியில் பிட்டிகல கிராமசபைப் பிரதேசத்துக்கு மரண விசாரணை அதிகாரி பதவி**

1. விண்ணப்பதாரியின் பெயரும் விலாசமும் (தெளிவான எழுத்தில்): ———.

(அ) முதலெழுத்துக்களின் பெயர் : ———.

(ஆ) வேறு பெயர்கள் : ———.

2. நிரந்தர வசிப்பிடமும் அங்கு வசித்த காலமும் : ———.

3. 1969 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆந் திகதிக்கு வயது : ———. வருடம் : ———. மாதம் : ———. நாள் : ———.

(அ) பிறந்த திகதியும் இடமும் : ———.

4. விவாகமானவரா ? விவாகமாகாதவரா ? : ———.

5. கல்வித் தராதரங்கள் : ———.

6. தற்போதைய தொழில் : ———.

7. கடன்தொல்லைகள் உண்டா ? அவ்வாறுயின் அதன் விபரங்கள் : ———.

8. விண்ணப்பதாரிக்குச் சொந்தமான சொத்துக்களும் அவற்றின் பெறுமானமும் : ———.

9. விண்ணப்பதாரி ஏதாவதொரு குற்றச்சாட்டின்பேரில் தண்டனை பெற்றவரா ? : ———.

10. இப்பதவியின் பொருட்டுள்ள வேறும் உரிமைகளின் விபரங்கள் : ———.

11. இதற்கு முன்னர் உத்தியோகம் பார்த்ததுண்டா ? அவ்வாறுயின் விபரங்கள் : ———.

12. ஸ்தல ஸ்தாபன அவைகளில் நீர் ஒரு அங்கத்தவரா ? :———.

———
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ———.

2-335—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841

---

## உள்ளூராட்சி அமைச்சின் நாடு, நகர நிர்மாணப் பகுதி

### படவரைஞர் பதவிகள்

உள்ளூராட்சி அமைச்சின் நாடு, நகர நிர்மாணப் பகுதியில் 2 ம் வகுப்புப் படவரைஞர் பதவிகள் இரண்டிற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் 2.3.1969 ம் திகதியிலோ அல்லது அதற்கு முன்பாகவோ எனக்கு அனுப்பப்படல் வேண்டும்.

2. **சம்பளப்படியும் சேவை நிபந்தனைகளும்.**—

(1) இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருடாந்தம் ரூபா 1,260—120—ரூபா 3,780 ஆகும். ரூபா 2,820 க்கு முன் வினைத்திறமை காண்தடை உண்டு.

**குறிப்பு.**—தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு அவர்களின் தகைமைகளும், அனுபவமும் ஒத்துவரக்கூடியதாக இருந்தால் தொடங்குகிற சம்பளத்திலும் மேலான தொடக்கச் சம்பளம் திறைசேரியின் அங்கீகாரத்துடன் வழங்கப்படும்.

3. **ஒப்பந்த நிபந்தனைகள்.**—பதவிகள் நிரந்தரமானதும் இளைப்பாறற் சம்பளம் உடையனவுமாகும். நியமிக்கப்பட்டவர்கள் மூன்று ஆண்டுகாலத் தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவர்.

4. **தேவையான தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தான்—

(அ) 20 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும், சிறந்த நல்லொழுக்கமும், உடலுறுதியும் உடையவராகவும்,

(ஆ) (i) இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியில் (படவரைஞர் பயிற்சி நெறியை) ஒருவருடகால முழு நேரத்தில் பூர்த்தி செய்தவராகவும் அல்லது வேறு ஒத்த மதிப்புடைய பயிற்சிநெறியுடன் (உதாரணம் : நிலஅளவைப்படவரைஞர்) இருவருடத் தொழிற் பயிற்சியையும், அல்லது

(ii) சிறிய மேற்பார்வையாளரின் பயிற்சி நெறியை அல்லது கனிஷ்ட தொழில் நுட்ப அலுவலாளர்கள் பயிற்சி நெறியை ஒருவருடத் தொழிற் பயிற்சியுடன் இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியில் பூர்த்தி செய்துள்ளவராகவும் ; அல்லது

(iii) நான்கு வருட ஒழுங்கான தொழிற்பயிற்சியை புகழ்வாய்ந்த பொறியியல் நிறுவனத்துடன் அல்லது உரிமைப் பொறியியலாளர் அல்லது கட்டடக்கலைஞரின் கீழ் பெற்றதுடன், இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் 3 வருட கால மாலை நேர வகுப்பை வேறுன தரத்தில் செய்துள்ளவராகவும் (இத்தகைமைகளை உடைய பரீட்சார்த்தி ரூபா 1,620 தொடக்கச் சம்பளத்திற்குத் தகுதி உடையவராவர்) அல்லது

(iv) இலங்கை தொழில் நுட்பக்கல்லூரியில் கட்டம் II கட்டட அமைப்பில் சித்தி 1947 ம் ஆண்டுக்குமுன் அடைந்ததுடன் புகழ்வாய்ந்த வர்த்தக தாபனத்தில் அல்லது அரசாங்கத் திணைக்களத்தில் கணிப்பில் அல்லது படவரைஞராக இரு வருடகாலத்திற்கு மேலாகப் பணிபுரிந்தவராகவும் ; அல்லது

(v) புகழ்வாய்ந்த பொறியியல் நிறுவனத்தில் அல்லது உரிமை பெற்ற பொறியியலாளர் அல்லது கட்டடக் கலைஞரின் கீழ் படவரைஞராக ஐந்து வருடங்கள் சேவை செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் பிரதிகளை இணைத்தல் வேண்டும் :—

(i) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய கவனிப்பு—ஞானஸ்னானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கு பிரமாணச் சட்டக் கோவைக்கென வழங்கப்பட்ட சான்றிதழ்களோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(ii) உயர்ந்த கல்வித் தகைமைச் சான்றிதழ் ; அத்துடன்

(iii) சமீபகாலத்தில் பெற்ற மூன்று நற்சான்றிதழ்கள்.

6. அரசாங்க சேவையில் உள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள, அவற்றைப் பார்க்க.

டபிள்யூ. பத்மநாதன்,
சிரேட்ட உதவிச் செயலாளர்,
நிதியும் தாபனமும்,
உள்ளூராட்சி அமைச்சு.

டீ. ஆர். விஜயவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
1969 ம் ஆண்டு பெப்புருவரி மீ 6 ந உ.

**உள்ளூராட்சி அமைச்சின் நாடு, நகர நிர்மாணப் பிரிவு படவரைஞர் பதவிக்கான விண்ணப்பப் படிவம்**

1. முழுப் பெயர் : ————.
2. தற்போதைய முகவரி : ————.
3. பிறந்த இடமும் திகதியும் : ————.
4. தேசிய இனம் : ————.
5. தற்பொழுது ஏதும் பதவி வகிப்பின் : ————.
6. தற்பொழுது பதவியில் இல்லாவிட்டால், கடைசியாக வகித்த பதவி : ————.
7. கல்வித் தகைமைகள் : ————.
8. தொழில் நுட்பத் தகைமைகள் : (சித்தி எய்திய பரீட்சைகளைக் கூறுக) : ————.
9. பயிற்சியின் விபரங்கள், தொழிற்பயிற்சி முதலியன, திகதிகளுடன் : ————.
10. முந்திய அனுபவம், நியமனங்கள் முதலியனவற்றின் விபரங்கள் திகதிகளுடன் : ————.
11. ஏதாவது அரசாங்க திணைக்களத்தில் ஏற்கெனவே வேலையில் இருந்தால் அதைவிட்டு விலகியதற்குச் சரியான காரணம் : ————.
12. சட்டமுறை நீதி மன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டால் குற்றத்தின் விபரங்கள், தண்டனை ஆகியவற்றைக் குறிப்பிடுக : ————.

————
ஒப்பம்.

திகதி : ————.

2—407—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841

---

## புகையிரதப் பகுதி பாதை வேலைப் பிரிவில் விசேட பயிற்சியாளர்கள் பதவிகளுக்கு ஆட்சேர்த்தல்

இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதியில் பாதை வேலைப் பிரிவில் கட்டட, நிரந்தர பாதை, பாலங்கள், சைகை, பார்குழி கிளைகளில் II ம் தர போர்மன் பதவிகளில் காலி இடங்களை நிரப்புவதற்கு விசேட பயிற்சியாளர் பதவிகளுக்கு ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **தேவையான தகைமைகள்.**—

(அ) விண்ணப்பதாரிகள் இலங்கையராய் இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்பங்கள் கிடைப்பதற்கென நிர்ணயிக்கப்பட்ட கடைசித் திகதியன்று அவர்கள் 16 வயதிற்கு குறையாமலும் 21 வயதிற்கு கூடாமலும் இருத்தல் வேண்டும். அத்துடன் நல்ல உடற்றகுதி உடையவராயும் இருத்தல் வேண்டும் ;

(இ) அவர்கள் சிரேட்ட பாடசாலை சான்றிதழ் பரீட்சையில் கணிதத்துடன் சித்தியடைந்திருக்க வேண்டும் அல்லது அதற்கு சமமான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும் ; அல்லது ;

கல்விப் பொது தராதரப் பத்திரம் (சாதாரண பத்திரம்) பரீட்சையில் சிங்களம்/தமிழ் பாஷை, கணிதம் உட்பட இன்னும் நான்கு பாடங்களில் எல்லாமாக ஆறு பாடங்களில் இரண்டு தடவைக்கு மேற்படாமல் எடுத்து சித்தியடைந்திருக்கவேண்டும் ;

(ஈ) அவர்கள் விவாகமாகாதவர்களாய் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—புகையிரதப் பகுதி ஊழியர்கள் மேற்கூறிய தகைமைகள் இருப்பின் 21 வயதிற்கு மேற்பட்டாலும் விண்ணப்பங்கள் கிடைப்பதற்கென நிர்ணயிக்கப்பட்ட கடைசித் திகதியன்று 30 வயதிற்கு மேற்படாமலிருந்தால் விண்ணப்பிக்கலாம்.

3. (i) முன்னைநாட் படைச்சேவையாளர்கள் வயதிற்கு இந்த வர்த்தமானியின் முற்பகுதியில் கூறப்பட்ட பொது நிபந்தனைகளின்படி கோரப்படின் அவர்களுடைய திருப்தியான சேவைக்கு அத்தாட்சியாக விலக்கற் சான்றிதழ மூலப்பத்திரம் அனுப்புதல் வேண்டும்.

(ii) முன்னை கடைசிப் போரில் அடைபட்டிருந்தவர்கள் விதித்த வயதெல்லைக்காக தாங்கள் அடைபட்டிருந்த காலத்தை தங்கள் வயதிலிருந்து தேவைப்பட்டால் கழிக்கலாம், ஆனால், தேவையான கல்வித் தகைமைகள் இருப்பதோடு அடைபட்டிருந்ததற்கு திருப்தியான அத்தாட்சியும் காட்ட வேண்டும்.

(iii) இலங்கையிலுள்ள ஐக்கிய இராச்சிய கடற்படை, விமானப்படையிலிருந்து விலக்கப்பட்ட குடியியல் ஊழியர்கள் விதித்த வயதெல்லைக்காக தங்கள் வயதிலிருந்து ஐக்கிய இராச்சிய சேவையிலிருந்த காலத்தை கழிக்கலாம், ஆனால்—

(அ) எல்லா வகையினும் தகைமை பெற்றிருக்க வேண்டும் ;

(ஆ) அந்த சேவை தொடர்ந்தும் திருப்தியாயிருந்திருக்க வேண்டும்.

**குறிப்பு.**—

இந்தப் பந்தியில் கூறப்பட்டவர்களுக்கும் புகையிரதப் பகுதி ஊழியர்களுக்கும் விவாகம் தகைமையற்றதாகக் கருதப்படாது.

4. விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களோடு கீழ்காண்பவற்றின் பிரதிகள் (மூல ஓலையல்ல) இணைக்கப்படுதல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவின் அத்தாட்சிப் பத்திரம் (பாடசாலைக்கு உரிய உபயோகத்திற்காக வழங்கப்படும் பிறப்புப் பத்திரமோ, சத்தியக் கடுதாசிகளோ அல்லது ஞானஸ்நான பத்திரங்களோ பிறப்பு பதிவு அத்தாட்சிப்பத்திரத்திற்குப் பதிலாக ஏற்கப்படாது.

(ஆ) கல்விச் சான்றிதழ்கள்

5. பொறுப்புள்ள ஒருவரால் கொடுக்கப்பட்ட நற்சான்றுப்பத்திரம் ஒன்று விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரி ஒரு அரசாங்க பாடசாலையில் அல்லது ஒரு உதவி பெறும் பாடசாலையிற கல்வி பயின்றவராயின் நற்சான்றுப் பத்திரம் அவர் கடைசியாகக் கல்வி பயின்ற பாடசாலையின் அதிபரால் கொடுக்கப்பட்டதாயிருத்தல் வேண்டும் அல்லது ஒரு சமாதான நீதவானல், வழக்கறிஞரால், நியாயதுரந்தரரால் அல்லது நொத்தாரிசால் அல்லது பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரால், அல்லது வருடம் ஒன்றுக்கு ரூ. 2,400 அல்லது அதற்குமேல் சம்பளம் பெறும் ஒரு அரசாங்க உத்தியோகத்தரால் அல்லது விண்ணப்பதாரியைப் பற்றிய விபரத்தை இலகுவல் தரக்கூடிய வரும், பிரபலஸ்தருமான ஒருவரால் கொடுக்கப்பட்ட சான்றிதழ். நற்சான்றுப் பத்திரத்தில் அதைக் கொடுத்தவரின் பெயர், தொழில், விலாசம் முதலியன தெளிவாகக் காட்டப்பட்டிருத்தல் வேண்டும். (அரசாங்க உத்தியோகத்தில் இருப்பவர்களிடமிருந்து இந்த பந்தியில் கூறப்பட்ட சான்றிதழ்கள் கோரப்படமாட்டாது).

6. விண்ணப்பங்கள் கீழ்க்காணப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்தில் தன்னுடைய சொந்தக் கையெழுத்தில் நிரப்பி சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்பப்படல் வேண்டும். நேர்முகப் பரீட்சையில் சான்றிதழ்களை (மூல ஓலைகளை) சமர்ப்பித்தல் வேண்டும். அச்சிட்ட விண்ணப்பப் பத்திரங்கள் கிடைக்கப்படாது.

7. 1969 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ம் திகதி மாலை 4.30 மணிக்குமுன் (விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கு கடைசித் திகதி) கிடைக்கக் கூடியதாக பொது முகாமையாளர், இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி, தபால் பெட்டி இலக்கம் 355, கொழும்பு 10 என முகவரியிட்டு பதிவு தபால் மூலம் (இந்தப் பகுதி உத்தியோகத்தர் எவருக்கும் தனிப்பட்ட முறையில் இல்லாமல்) அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அஞ்சலில் காணமற் போய்விட்டன அல்லது தாமதித்து விட்டன என்னும் குற்றச்சாட்டுகள் எதுவும் கருதப்படமாட்டாது. விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை கடைசித் திகதி வரைக்கும் தாமதித்தால் அதனல் ஏற்படும் இடையூறுக்கு தாமே பொறுப்பாவர்.

8. அரசாங்க சேவையிலிருக்கும் ஊழியர்களின் விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தில் விதித்த திகதிக்குப்பின் கிடைக்குமாயின் அவை கருதப்படமாட்டாது, ஆனல் விண்ணப்பங்கள் விதித்த திகதிக்கு முன் தலைமை அதிபரால் கிடைக்கப்பட்டு தாமதத்திற்கு செல்லுபடியான காரணங்கள் காட்டி விண்ணப்பததை ஏற்கும்படி அவர் விதந்துரைத்தால் ஏற்கப்படும்.

9. தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் தெரிவு செய்யப்பட்டவுடன் இந்தத் தீவில் எந்தப் பகுதியிலும் சேவை புரிவதற்கு உடற்றகுதியுடையவர் களெனபதற்கு கண் பார்ச்சை உட்பட ஒரு மருத்துவ சோதனையில் சித்தியடைய வேண்டும்.

**10. சேவை நிபந்தனைகள்.—**

(i) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நான்கு வருடங்களுக்கு பயிற்சி புரிய வேண்டும். எந்தப் பிரிவில் அவர்களை நியமிக்கப்படுமோ அதற்கு ஏற்ற செய்முறை பயிற்சியின் விபரங்கள் பின்வருமாறு—

கட்டடக் கிளை—

| | | |
|---|---|---|
| 6 மாதங்களுக்கு | .. | வேலைக்களம், இரத்மலானை |
| 1 வருடத்திற்கு | .. | வரைவு அலுவலகமும் அளத்தலும் (தொடக்கப்பயிற்சி) |
| $2\frac{1}{2}$ வருடங்கள் | .. | அலுவலகமும், நேரம் வைத்தலும், அதில் செய்முறை பயிற்சிக்கான முதல் வருடம் கொழும்பு மாவட்டத்தில் இருக்கும். |

நிரந்தரப் பாதை வேலைக் கிளை—

| | | |
|---|---|---|
| 6 மாதங்களுக்கு | .. | வேலைக்களம், இரத்மலானையிலும், நிரந்தர பாதை வேலைக் களம், தெமட்டகொடையிலும். |
| 6 மாதங்களுக்கு | .. | வரைவு அலுவலகத்திலும் அளத்தலும் (தொடக்கப்பயிற்சி) |
| 1 வருடத்திற்கு | .. | அலுவலகத்திலும், நேரம் வைத்தல், அதில் செய்முறைப் பயிற்சி முன்னுரிமை கொழும்பு மாவட்டத்தில். |
| 2 வருடங்களுக்கு | .. | செய்முறைப் பயிற்சி |

பாலங்கள் கிளை—

| | | |
|---|---|---|
| 6 மாதங்களுக்கு | .. | வேலைக்களம், இரத்மலானை |
| 1 வருடத்திற்கு | .. | பால வேலைக்களம், சாலையிலும், அளத்தலும் (தொடக்கப் பயிற்சி) |
| $2\frac{1}{2}$வருடத்ங்களுக்கு | .. | அலுவலகத்திலும், வரைவு அலுவலகத்திலும், நேரம் வைத்லும், அதில் முதல் வருடம் வரைவு அலுவலகத்திலும், சாலையிலும், தெமட்டக்கொடை. |

சைகைக் கிளை—

| | | |
|---|---|---|
| 6 மாதங்களுக்கு | .. | வேலைக்களம், இரத்மலானை. |
| 1 வருடம் | .. | சைகை எஞ்சினியருடைய வேலைக்களம், தெமட்டக்கொடை. |
| $2\frac{1}{2}$ வருடங்கள் | .. | அலுவலகத்திலும், வரைவு அல்லுவலகத்திலும், நேரம் வைத்தலிலும், அதில் செயமுறை பயிற்சி முதல் வருடம் வரைவு அலுவலகத்திலும், சைகை அலுவலகத்திலும், கொழும்பு வட்டாரத்திலும். |

பார்க்குழி கிளை—

| | | |
|---|---|---|
| 9 மாதங்கள் | .. | வேலைக்களம், இரத்மலானை. |
| 3 மாதஙகள் | .. | வரைவு அலுவலகமும், அளத்தலும் (தொடக்கபபயறசி) |
| 3 வருடங்கள் | .. | மாவட்ட பார்க்குழி, அலுவகல வேலை, நேரம் வைத்தல் அதீதாடு பார்க்குழி செய்முறையில் அனுபவம். |

(ii) பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்கள் பட்டோலை (" அ " வில் குறிககபபடட பாடஙகளைப் படித்தும், இலஙகை தொழிநுட்பக் கல்லூரியில் வகுப்புகளுக்குத் தோற்றித் தேவையான சான்றிதழ் பெற வேண்டும்.

(iii) பயிறசியாளர்கள் திணைக்கள விதிகளிலும் நேரம் வைத்தலிலும் ஒரு பரீட்சையில சித்தியடைவதுடன் இனனும வதிக்கப்பட்ட பாடஙகளிலும 3 ம் வருட பயிறசிக காலம் முடிவதறகுள் சித்தியடைய வேண்டும். இதில் சிததியடையும்வரை குறித்த திட்டத்தில் முனனேற்றம் ஒன்றும் நடைபெற அனுமதிக்கப்படமாட்டாது. 4 ம் வருடக் கடைசியில சித்தி யடையாவிட்டால பயிறசியாளர்களை நீக்கப்படுவர். அவர்களை இன்னும் தொழிநுடபப் பாடஙகளல் 5 ம் வருட கடைசியில் சித்தியடைய கோரப் படுவர். அபபடி அவர்கள் சித்தியடையாவிடடால் நீக்கப்படககூடும்.

(iv) பயிற்சியாளர்கள் பயிற்சிக்காலத்தில் சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டும். II ம் தர போர்மன் நியமனம் சிங்களத்தில தேர்ச்சியில் தஙகியிருககும்.

பயிற்சியாளர்கள் 1956 ம் ஆண்டு 33 ம் இலக்க அரசகரும பாஷை சட்டத்துககும் அரசாங்க பாஷைக் கொள்கையை அமுலுக்குக் கொண்டு வருவதறகாக இனிமேல் ஏற்படுத்தப்படும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் கடடுபபடுவார்களென உடன்படவேண்டும்.

(v) பரீட்சையில் இரண்டு பகுதிகளையும் முடித்தவுடனும் நாலு வருட பயிற்சிககாலத்தைத் திருப்தியுடன் முடித்தவுடனும், தகுதியாயிருந் தால, பயிறசி முடிந்தவுடன் அவர்களுக்கு உரித்தான சம்பளத் திடடத்தில் அவர்களை வைத்திருக்கப்படுவர். காலி இடஙகள் எப்பொழுது வருவறதோ அபபொழுது அவர்கள் தகுதியாயிருந்தால் II ம் தர போர்மன் நியமனத்திற்கு II ம் தர போர்மன நியமனத்திற்குரிய சம்பளத் திட்டத்தில நரந்தர தாபனத்தில் நியமனம் பெற உரித்தாவர்.

பயிறசி முடிந்தவுடன் நிரந்தர நியமனம் கொடுக்கப்படுமென உத்தர வாதம் இல்லை.

(vi) பயிற்சியாளர்கள் விதிக்கப்பட்ட நேரங்களில் வேலை செய்ய வேண்டப்படுவர். அத்துடன் ஜீ. 261 ம் இலக்கமுடைய படிவத்தில் தங்களுடைய இருப்புச் சொத்துக்களைக் கூறும்படி வேண்டப்படுவர்.

(vii) பயிற்சியாளர்கள் அமுலில் இருக்கும் திணைக்கள விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் கட்டுப்பட வேண்டப்படுவர். ஒழுக்காறுகளில் தவறினால் தலைமை அதிபரோ அல்லது அனுமதிக்கப்பட்ட வேறு உத்தியோகத்தராலோ அவர் தீர்மானித்தபடி நடவடிக்கை எடுக்கப்படும்.

(viii) பயிற்சியாளர்கள் அரசாங்க சேவை அதிகார சபையின் விதிகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், நடைமுறை கைநூல் விதிகளுக்கும், இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதியின் விதிகளுக்கும், இன்னும் அரசாங்கத்தாலும் புகையிரதப் பகுதியாலும் விதிக்கப்பட்ட பிரமாணங்களுக்கும் கட்டுப்பட வேண்டும்.

**பட்டோலை " அ "**

II ம் தர போர்மன் பதவிக்குப் பதவியேற்றம் கிடைக்கமுன் படிக்கவேண்டியவை.

கட்டட கிளை—புகையிரதப் பகுதியினதும் கிளைப் பகுதியினதுமான விதிகள், நேரம் வைத்தல், கட்டடம் அமைத்தல் (தொடக்க வேலை), மதிப்பீடுகளும் அளவறிவுகள்.

பாதை வேலை கிளை—தொடக்க வரைவுகளும் கீறுதலும், புகையிரதப் பகுதியினதும் கிளைப் பகுதியினதுமான விதிகள், நேரம் வைத்தல். கேள்விகள் " கோல் " லிலுள்ள மாதிரியும், அல்லது அங்கீகரிக்கப்பட்ட பாதை வேலை கைநூல்களில் போலும், எளிய கணிதமும்.

பாலங்கள் கிளை—புகையிரதப் பகுதியினதும் கிளைப் பகுதியினதும் ஆன விதிகள், நேரம் வைத்தல், மெக்கானிக்ஸ்—பிரயோகமும் தொடக்கமும்.

பார்க்குழிக் கிளை—புகையிரதப் பகுதியினதும் கிளைப் பகுதியினதுமான விதிகள், நேரம் வைத்தல், மெக்கானிக்ஸ்—பிரயோகமும் தொடக்கமும்.
பார்க்குழி வேலை பாதுகாப்பு விதிகள்.

11. பயிற்சியாளர்களும் (அவர்களுடைய தந்தைமாரோ அல்லது பாதுகாவலரோ) இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதியில் முழுப் பயிற்சிக் காலமும் (4 வருடங்களுக்குச்) சேவை புரவதாகவும் அதற்குப் பிறகு II ம் தர போர்மன் நியமனம் கிடைத்த திகதி தொடக்கம் ஐந்து வருடங்களுக்கு சேவை புரிவதாகவும் ஒரு முறியில் கையெழுத்திட வேண்டும்.

12. எந்தப் பயிற்சியாளருடைய குணம் திருப்தி இல்லாவிட்டாலும் அல்லது எந்தப் பயிற்சியாளராவது பயிற்சியில் திருப்தியான முன்னேற்றம் இல்லாவிட்டாலும், அல்லது எந்தப் பயிற்சியாளரையாவது பயிற்சியில் தொடர்ந்து வைத்திருப்பது சேவைக்கு நலன் இல்லையெனக் கருதப்பட்டால், அந்தப் பயிற்சியாளருடைய ஒப்பந்தத்தை முன்னறிவித்தல் இல்லாமல் முறிக்கப் பொது முகாமையாளருக்கு உரிமையுண்டு.

13. சம்பள அளவுத் திட்டம் பல காலங்களில்—
பயிற்சிக் காலம்

| | | | |
|---|---|---|---|
| 1 ம் வருடம் | .. | .. | ரூ. 2.20 நாளுக்கு |
| 2 ம் வருடம் | .. | .. | ரூ. 2.60 நாளுக்கு |
| 3 ம் வருடம் | .. | .. | ரூ. 3.00 நாளுக்கு |
| 4 ம் வருடம் | .. | .. | ரூ. 3.40 நாளுக்கு |
| *4 ம் வருடம் | .. | .. | ரூ. 3.40 நாளுக்கு |
| †4 ம் வருடம் | .. | .. | ரூ. 3.80 நாளுக்கு |

*பகுதியின் முதல் பரீட்சையில் சித்தியடைந்தவுடன்.

†பகுதியின் இரண்டாம் பரீட்சையில் சித்தியடைந்தவுடன்.

**போர்மன்—தரம் II**

ரூ. 1,860—120—ரூ. 3,780 வருடத்திற்கு

**போர்மன்—தரம் I**

ரூ. 3,900—180—ரூ. 5,340 வருடத்திற்கு.

14. ஒரு பயிற்சிப் பகுதியிலிருந்து இன்னொரு பயிற்சிப் பகுதிக்கு போவதற்குமுன் பயிற்சியாளர் தன்னுடைய உடனே மேலேயுள்ள அதிகாரியிடமிருந்து திறமையுள்ள சான்றிதழ் கிடைக்கப் பெற வேண்டும். அவருடைய வேலைக்கு வரவுகளிலிருந்தும், நேரந் தவறாமையிலிருந்தும், நல்ல சுபாவத்திலிருந்தும், வேலையில் விருப்பம் காட்டுவதிலிருந்தும், பொது கெட்டித்தனத்திலிருந்தும், நல்ல குணத்திலிருந்தும், தொழிலாளரைக் கட்டுப்படுத்துவதில் தளராமையையும் கெட்டித்தனத்தையும், பார்த்துத்தான் அவரை மதிப்பீடு செய்யப்படும். ஒரு பயிற்சியாளர் சுகயீனம் காரணமாகவும், விடுதலை மூலமோ விடுதலையில்லாமலோ வராததினால் நட்டப்பட்ட காலத்தைக் கூடிய பயிற்சியின் மூலம் திருப்திப்படுத்தினால்தான் பயிற்சியின் மற்றப் பகுதிக்குப் போக அனுமதிக்கப்படுவர். திருப்தியான முன்னேற்றத்தைப் பொறுத்து படி ஏற்றம் கொடுக்கப்படும்.

15. காலி இடங்கள் உண்டாவதைப் பொறுத்தும் தகைமையைப் பொறுத்தும் போர்மன் தரம் II லிருந்து தரம் I க்குப் பதவியேற்றம் இருக்கும்.

16. எந்த விண்ணப்பத்தையாவது காரணம் கூறாமல் நிராகரிக்க பொது முகாமையாளருக்கு உரிமையுண்டு.

17. இந்த வர்த்தமானியில் பாகம் I, பகுதி II ல் பிரசுரிக்கப் பட்டுள்ள அரசாங்க சேவையில் நியமனங்களுக்காகிய பொது நிபந்தனை களைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன.

பீ. டீ. ரம்பாலா,
பொது முகாமையாளர்.

தபால் பெட்டி இல. 355,
கொழும்பு 10,
1969 ம் ஆண்டு பெப்புருவரி மீ 5 ம் திகதி.

### மாதிரி விண்ணப்பம்

**விசேட பயிற்சியாளர் பதவி—பாதை வேலைப் பகுதி**
**இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி**

1. முழுப் பெயர் :————.
(பெரிய எழுத்தில்)

2. முழு அஞ்சல் விலாசம் :————.
(பெரிய எழுத்தில்)

3. தேசிய இனம் :————.
(அ) பரம்பரையில் இலங்கை குடியா அல்லது,
(ஆ) பதிவினால் இலங்கைக் குடியா என்பதைக் கூறுதல் வேண்டும். பரம்பரையில் இலங்கைக் குடியென்றால் கீழ்க்காணும் விபரங்கள் தருக :—
பிறந்த இடம் :—
(அ) அபேட்சகரின் :————.
(ஆ) அபேட்சகரின் தந்தையின் :————.
(இ) அபேட்சகரின் தந்தை வழிப்பாட்டனாரின் :————.
(ஈ) அபேட்சகரின் தந்தைவழி முப்பாட்டனாரின் :————.
அபேட்சகர் இலங்கையில் பிறந்தவரென்றால் ஒன்றில் (ஆ) அல்லது (இ) யையும் (ஈ) யையும் (அ) வுடன் நிரப்ப வேண்டும் அபேட்சகர் இலங்கையில் பிறக்கவில்லையென்றால் ஒன்றில் (ஆ) வையும் (இ) யையும் அல்லது (இ) யையும் (ஈ) யையும் (அ) வுடன் நிரப்ப வேண்டும்.

4. (அ) பிறந்த திகதி :————.
(பிறப்புப் பதிவுச் சான்றிதழின் படியை இணைக்க வேண்டும்)
(ஆ) 1969 ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 27 ம் திகதியன்று வயது :—
வருடங்கள் :——. மாதங்கள் :——. நாட்கள் :——.

5. சித்தியடைந்த பரீட்சைகள் :————.
(சான்றிதழ்களின் படிகளை இணைக்கவும்)

6. விவாகமானவரா அல்லது தனியானவரா :————.

7. புகையிரதப் பகுதி ஊழியரா அல்லது புகையிரதப் பகுதியின் ஊழியரின் மகனா என்பதைக் கூறவும் :————.

8. புகையிரதப் பகுதியின் ஊழியரென்றால் பின்வரும் விபரங்கள் தருக :—
(i) முதலாக நியமிக்கப்பட்ட திகதி :————.
(ii) தற்போதைய தரமும் பகுதி இலக்கமும் :————.
(iii) தற்போதைய இடம் :————.

9. தற்போதைய நியமனம், இருந்தால் :————.

10. முன்பு இராணுவத்தில் இருந்தவரா அல்லது போர்க்காலத்தில் அடைபட்டு இருந்தவரா அல்லது இலங்கையிலிருந்த ஐக்கிய இராச்சியத்தின் ஸ்தாபனங்களாகிய கடற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து விலகிய குடியியல் ஊழியரா என்பதையும் கூறவும் :————.
(விபரங்கள் கொடுத்து அத்தாட்சி காட்ட வேண்டும்)

என்னுடைய அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியளவில் இந்த விண்ணப்பத்தில் நான் கூறப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையெனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். ஆட்சேர்ப்பு விதிகளின்படி நான் தகுதியற்றவன் எனக் கருதப்படின் என்னுடைய விண்ணப்பம் நிராகரிக் கப்படுமென்பதை நான் அறிவேன்.

————,
அபேட்சகரின் கையொப்பம்.

திகதி :————.

2–301—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841

---

## இரத்தினபுரி மாவட்டத்தில் நிதிவிற்ற பிரிவிற்கு பிறப்பு, இறப்பும் அட்டகலம் கோறளை பிரிவிற்கு விவாக (பொது, கண்டியர்) பதிவாளர் பதவி

நிதிவிற்ற பிறப்பு இறப்பு, பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடி யிருப்பவர்கள், அப்பிரிவில் சில காலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண், பெண், இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தைந்து வய திற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களை பொறுத் தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங் களும், ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும் காரியாதிகாரியின் அலுவலகங்களிலும் கிராமசேவையாளர்களின் அலுவலகங்களிலும் உள் ளூராட்சி சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தாபனம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுதாபன நிலையங் களிலும் இந்த பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும் காரியால யங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள் ளக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1969 ம் ஆண்டு பங்குனி மாதம் 14 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

எக்ஸ். எம். செல்லதம்பு,
மேலதிகமாகாண அதிபர்,
மாவட்டப் பதிவாளருக்காக.

இரத்தினபுரி மாவட்டம்,
பதிவாளர் அலுவலகம்,
1969 ம் ஆண்டு மாசி மீ 3 ந உ.

2–388—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## நிருவாகக் கல்விக் கழகம்

**பொதுத் திறைசேரி**

1969, ஏப்பிரில்—மே மாதங்களில் முகாமை அபிவிருத்தி பற்றி ஒரு குறுகிய காலப் படிப்பு நெறியைக் கொழும்பில் நடாத்துவதற்கு நிருவாகக் கல்விக் கழகம் ஒழுங்கு செய்துள்ளது. ஆறு கிழமை களுக்கு நடாத்தப்படும் இப்படிப்பு நெறி 1969 ஏப்பிரில் 17 இல் தொடங்கி 32, கிளென் ஆமெர் இடம், கொழும்பு 3 என்னும் முகவரியிலுள்ள நிருவாகக் கல்விக் கழகத்தில் நடாத்தப்படும்.

2. இப்படிப்பு நெறியானது அபிவிருத்தி முறைகளுக்குத் தேவை யான நிருவாக உதவியைத் தரும்பொருட்டு அரசாங்க சேவையில் முகாமைத் தகுதியை விருத்தியடையச் செய்வதற்கென அமைந்துள்ளது.

3. இப்படிப்பு நெறியின் நோக்கங்களாவன :—
(அ) பின்வருவனவற்றை உணர்ந்து விளங்கிக் கொள்ளல்—
(i) அரசாங்கத்தின் மொத்த நோக்கமும் முறையும் ;
(ii) முகாமையின் சூழ்நிலை :
(iii) அமைப்பு முறை நடத்தை ;
(iv) முகாமைத் தொழிலின் முழுத் தன்மை.
(ஆ) தீர்ப்புச் செய்யும் முறையை வலுப்படுத்தல்.
(இ) தற்போதைய நிருவாக முறைகளையும் நுட்பங்களையும் ஆராய்தல்,
(ஈ) தொடர்புகளை மேம்படுத்தல்.
(உ) முகாமையாளர் தமது சொந்தக் கொள்கைகளையும் போக்குக் களையும் நுணுக்கமாக ஆராயும் பொருட்டுக் கருத்தமைவுள்ள கருத்தரங்கு ஏற்படுத்தல்.

(ஊ) தனி முகாமையாளர் ஆற்றலில் திருத்தத்தையும் தன்னபி விருத்தியையும் பெறுவதற்கு முயற்சி செய்யுமாறு விருப்பை யுண்டாக்கல்.

4. இப்பயிற்சி நெறி இலங்கை நிருவாக சேவையின் IV ஆம் V ஆம் வகுப்பிலுள்ள நிரந்தரமான உத்தியோகத்தர்களுக்கும் அதே நிலையில் அரசாங்க சேவையிலுள்ள தொழினுட்ப விஞ்ஞான உத்தியோகத்தர் களுக்கும் ஏற்ற சேவை மூப்புள்ள அரசாங்க கூட்டுத்தாபன, படைச் சேவை உத்தியோகத்தர்களுக்கும் உரியதாகும். பதவி வரிசையில் குறைந்தது 8 ஆண்டுச் சேவையேனும் தேவைப்படும். பரந்த அனுபவ முள்ளோரும் தொழில் முறைப் பிரிவுகளும் பயன் பெறத்தக்கதாகப் பங்குபற்றுபவர் தெரிந்தெடுக்கப்படுவர். பங்குபற்றுவோரின் மொத்தத் தொகை 32 ஆகும்.

5. பயிற்சி பெறுவோர் இக்காலத்தில் தமது வழக்கமான கடமை களிலிருந்து விடுவிக்கப்பட்டு முழு நேரமும் இப்பயிற்சி நெறிக்கு வருமாறு வேண்டப்படுவர். அரசாங்க சேவையிலுள்ள தேர்ந்தெடுக்கப் படும் பயிற்சியாளர் இப்பயிற்சி நெறிக்குச் செல்வதற்கு கடமை விடுதலை யில் விடுவிக்கப்படுவர் ; நிதிப் பிரமாணங்கட்கேற்ப அவர்கள் வழக்கமான பிரயாண, உணவு, உறையகப் படிகட்குரித்துடையவராவர்.

6. இத்துடனிணைத்துள்ள மாதிரிப் படிவத்தில் முற்றுகவிருக்கவேண் டிய விண்ணப்பங்கள் 32, கிளென் ஆபர் இடம், கொழும்பு 3 என்னும் முகவரியிலுள்ள நிருவாகப் பயிற்சிப் பணிப்பாளரை 1969, மார்ச்சு 10 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ சென்றடைதல் வேண்டும். விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர் மூலமோ கூட்டுத்தாபனம் மூலமோ அனுப்பப்படல் வேண்டும் ; அவர்கள் குறித்த உத்தியோகத்தர் இப்பயிற்சி நெறிக்குச் செல்வதற்கு முழுச் சம்பளத்துடன் விடுவிக்கப் படுவர் எனவும் அப்பயிற்சி நெறிக் காலத்தின்போது எக்கடமைகளோ குறிப்பான வேலைகளோ அவருக்குக் கொடுக்கப்படமாட்டாவெனவும் சான்றளித்தல் வேண்டும்.

எச். என். வனசிங்க,
நிருவாகப் பயிற்சிப் பணிப்பாளர்,
திறைசேரிச் செயலாளருக்காக.

## நிருவாகக் கல்விக் கழகம்

**முகாமை அபிவிருத்தி நெறிக்கு விண்ணப்பப் படிவம்**

**1969, ஏப்பிரில்–மே**

**பாகம் I**

(தேர்வு நாடியினல் நிரப்பப்படல் வேண்டும்)

1. முழுப்பெயர் :————.
(குடும்பப் பெயர்களின் கீழ் கீறிடுக) (பெரிய எழுத்துக்களில்)
2. வயது :————. பிறந்த தேதி :————.
3. திணைக்களம் :————.
4. பதவிப் பெயர் :————.
5. உங்கள் சொந்தப் பொறுப்பைக் குறிப்பிட்டுத் தற்போதைய கடமை களை விவரிக்க :————.
6. முந்திய அனுபவம் :————.
(முன்னர் நீங்கள் வகித்த பதவிகளையும் அவற்றிற்குரிய தேதிகளையும் குறிப்பிடுக).
7. கல்வி பற்றிய தகைமைகள் :————.
(பட்டம், டிப்புளோமா, சான்றிதழ்கள் ஆகியனவும் பட்டத்திற்கும் டிப்புளோமாவுக்கும் படித்த பாடங்களும்)
8. இப்படிப்பு நெறியினல் நீங்கள் பெறமுயல்வது யாது என்பதை 500 சொற்களுக்கு மேற்படாமல் கூறுக ? :————.
9. முகவரியும் தொலைபேசி இலக்கமும் :————.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . ஆகிய நான்
(முழுப் பெயர்)

இங்கு கொடுத்துள்ள கூற்றுக்கள் எனது நம்பிக்கைக்கெட்டிய வரையில் உண்மையானவையும் சரியானவையுமெனச் சான்றளிக்கின்றேன்.

பயிற்சி பெறுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டால், நிருவாகப் பயிற்சிப் பணிப்பாளர் குறிப்பிடும் பணிப்புரைகளை நிறைவேற்றவும் அத்தகைய நிபந்தனைகளுக்கிணங்கி ஒழுகவும் நான் உடன்படுகின்றேன்.

————,
கையொப்பம்.

தேதி :————.

**பாகம் II**

திரு. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . என்பவர் தேர்ந்தெடுக்கப் பட்டால் அவர் இப்பயிற்சி நெறிக்குச் செல்வதற்கு முழுச்சம்பளத்தில் விடுவிக்கப்படுவர் ; இக்காலத்தில் அவருக்கு எவ்வித கடமைகளோ வேலைகளோ கொடுக்கப்பட மாட்டா.

————,
நியமிக்கும் அதிகாரியின்
கையொப்பமும் பதவிப் பெயரும்.

2–400—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## சிவில் விமானப் போக்குவரத்துப் பகுதி

காங்கேசன்துறை விமானத்தள நிருவாகக் கட்டடத்தில் பிரயாணிகள், பார்வையாளர்கள், ஊழியர்களுக்கு உணவு, சிற்றுண்டி முதலியன விற்பனை செய்தற்குரிய பிரத்தியேக உரிமைக்கான கேள்விப்பத்திரங்கள் சிவில் விமானப் போக்குவரத்து அதிபரால் கோரப்படுகின்றன. உரிமை அதிபரால் அறிவிக்கப்படும் காலத்திலிருந்து ஒரு ஆண்டுக்காகும். கேள்விப்பத்திரங்கள் 1.3.69 முற்பகல் 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப் படும்.

ரூபா 25 பிணைப்பணம் கட்டியதன் பின் இவ்வலுவலகத்திலிருந்து பெறப்படும் பத்திரத்திலேயே விண்ணப்பித்தல் வேண்டும். பிணைப்பணம் காங்கேசன்துறை விமானத்தள அலுவலகத்திலும், கொழும்புக்கு வெளியேயுள்ள கச்சேரிகளிலும், இவ்வலுவலகத்திலும் ஏற்றுக்கொள் ளப்படும்.

டபிள்யூ. எல். பி. டீ. மெல்,
சிவில் விமானப் போக்குவரத்து அதிபர்.

த. பெ. எண் 535,
லோட்டஸ் வீதி,
கொழும்பு 1,
1969 ம் ஆு பெப்பிரவரி மீ 7 ந உ.

2–411—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841

---

## மதுவரித் திணைக்களம்

**சீதுவ, பண்டாரவத்தையிலுள்ள அரசினர் சாராய வடிசாலைக்கு 1969 ம் ஆண்டு வைகாசி மாதம் முதலாம் திகதியிலிருந்து 1970 ம் ஆண்டு தை மாதம் 31 ந் திகதிவரைக்கும் கள் வழங்குவதற்கு கேள்விப்பத்திரம்**

1969 ம் ஆண்டு வைகாசி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1970 ம் ஆண்டு தை மாதம் 31 ந் திகதிவரையும் சீதுவ, பண்டாரவத்தையிலுள்ள அரசினர் சாராய வடிசாலைக்கு கள் வழங்குவதற்கு கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 7, ரொறிங்டன் சதுக்கத்திலுள்ள உள்நாட்டு விவகார அமைச்சின் கேள்விப்பத்திரச் சபைத்தலைவரால் 1969 ம் ஆண்டு பங்குனி மாதம் 5 ந் திகதி முற்பகல் 10 மணிவரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும்.

மதுவரி ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய கேள்விப் பத்திரங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும். அவரிடமிருந்து சகல விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

மு. ப. திசாநாயக்க,
மதுவரி ஆணையாளர்.

மதுவரி ஆணையாளர் அலுவலகம்,
ரொறிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7,
1969 ம் ஆு ஜனவரி மீ 31 ந உ.

2–315—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### மொனருகலை உப பிரிவு

மொனருகலை நீர்ப்பாசன உப பிரிவிலுள்ள கீழ்க்காணும் இரண்டு வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்களை பண்டாரவளையிலுள்ள ஊவாப் பிரிவு பெருமபாக நீர்ப்பாசனப் பொறியியலாளரால் 13.3.1969 வியாழக் கிழமை காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அதன்பின் உடனே திறக்கப்படும்.

| வேலைகளின் விபரம் | பதிவுத் தொகை ரூபா | கேள்விப் பத்திரக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| 1. ஹந்தபானகலத் திட்டத்தின் பாதைக்கு இரண்டாம் மைலில் இரண்டாம் முறை கல்லுப் பரவி, தார் ஊத்துதல் .. | 20,000 .. | 25 |
| 2. ஹந்தபானகல குளத்தின் கட்டிற்குத் திருத்த வேலைகள் செய்தல் .. | 60,000 .. | 100 |

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மேற்கூறிய தொகைக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களும், கிராம அபிவிருத்திச் சங்கங்களும், கூட்டுறவுச் சங்கங்களும் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக் கேள்விகளுக்கான வெற்றுப் பத்திரங்களை மொனருகலை, பதுளை மையங்கண நீர்ப்பாசனக் கந்தோர்களில் 9.3.1969 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிவரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகத்துடன் தாம் தற்போது திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் முழு விபரங்களையும் அவற்றின் பெறுமதியையும் ஒரு பத்திரத்தில் தெரியப் படுத்தி விண்ணப்பிக்க வேண்டும். ஒவ்வொரு வேலைக்கும் நேரே காட்டப்பட்டுள்ள கேள்விக் கட்டணத் தொகையை மேற்கூறியுள்ள அலுவலகங்களிலோ அல்லது ஏதாவதொரு கச்சேரியிலோ செலுத்திப் பற்றுச்சீட்டைச் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னரே கேள்வி வெற்றுப் பத்திரங்கள் கொடுக்கப்படும்.

4. மேலதிக விபரங்கள் மொனருகலை உப பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஏ. எப். மஹகமகே,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
மொனருகலை உப பிரிவு.

நீர்ப்பாசன அலுவலகம்,
மொனருகலை,
1969 ம் ஆண்டு ஜனவரி மீ 30 ந் உ.

2–395—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841

---

## மீறிகம வயோதிபர் இல்லம்

### விறகு கொண்டுவந்து கொடுத்தற்கான ஒப்பந்தம்

1969 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 1 ஆந் திகதியிலிருந்து 1969 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி வரைக்கும் மீறிகம அரசினர் வயோதிபர் இல்லத்திற்கு விறகு கொண்டுவந்து கொடுத்தற்கான ஒப்பந்தக் கேள்விகள் அழைக்கப்படுகின்றன. இது சம்பந்தமான மேற்கொண்ட விபரங்களை, மீறிகம வயோதிபர் இல்ல அதிபரிடமிருந்து அல்லது இந்தக் காரியாலயத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

2. ஒப்பந்தக் கேள்விகள், அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவு செய்யப் பட்ட தபாலில், 1969 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 26 ஆம் திகதி பகல் 12 மணிக்குப் பிந்தாமல், " சமூக சேவை அதிகாரி, பாலதக்ஷ மாவத்தை, காலி முகப்பு, கொழும்பு " என்ற விலாசத்திற்கு அனுப்பப் படல் வேண்டும். தபால் கூட்டின் இடது கை மூலையில், " 1968–1969 ஆம் ஆண்டில் மீறிகம அரசினர் வயோதிபர் இல்லத்திற்கு விறகு கொண்டுவந்து சேர்ப்பதற்கு ஒப்பந்தக் கேள்விகள் " என்ற வார்த்தைகள் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். ஒப்பந்தக் கேள்விகளை அனுப்புபவர்கள் விரும்பினால், இக்காரியாலயத்திலுள்ள கேள்விப்பெட்டிக்குள் நேரில் கொண்டுவந்து போடலாம்.

3. 1969 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 26 ம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு ஒப்பந்தக் கேள்விகள் திறக்கப்படும். ஒப்பந்தக் கேள்விகளை அனுப்புவோர் திறக்கும் காலத்தில் சமுகமளிக்கலாம்.

4. இந்தக் காரியாலயத்தில் அல்லது மீறிகம அரசினர் வயோதிபர் இல்ல அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் மாதிரிப்பத்திரங்களில் மட்டுமே ஒப்பந்தக் கேள்விகள் எழுதப்படல் வேண்டும். மாதிரிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்குஞ் சமயத்தில், ஒப்பந்தக் கேள்விகட்குரிய நிபந்தனைகள் சொல்லிக்கொடுக்கப்படும்.

5. ஒப்பந்தக் கேள்வி மாதிரிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தரிடத்தில், ரூபா 10/– பிணைப்பணம் கட்டுபவர்கட்கே, மாதிரிப்பத்திரங்கள் கொடுக்கப்படும். ஒப்பந்தக் கேள்வியை அனுப்புபவர் தெரிந்தெடுக்கப்பட்டால்; அவருடைய பிணைக்காசில் ஒரு பாகமாக எடுக்கப்படும். தெரிந்தெடுக்கப்பட்டவர், ஒப்பந்தஞ்செய்து வேலையைத் தொடங்குமுன், மீதி ரூபா 90/– கட்டும்படி கேட்கப்படுவர். தெரிந்தெடுக்கப்படாதவர்களின் பிணைக்காசுகள் திருப்பிக்கொடுக்கப்படும்.

6. ஒப்பந்தக் கேள்விகளை அனுப்புபவர்கள், தங்கள் கேள்விகள் சகலவிதத்திலும், செவ்வனே எழுதப்பட்டிருக்கின்றனவா எனச் சோதித்துக் கொள்ளுதல் வேண்டும். செவ்வனே எழுதப்படாத கேள்விகளை நிராகரிக்கச் சமூக சேவை அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

7. ஒப்பந்தக் கேள்வியை அனுப்பும் ஒருவர் தமது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டதும், அன்னார் ஒப்பந்தஞ் செய்ய மறுத்தாலேனும், தவறினாலேனும், மீதிப் பிணைக்காசு கட்டும்படி கேட்கப்படும்பொழுது அங்ஙனம் செய்யத் தவறினாலேனும், அன்னார் ஆரம்பத்தில் கட்டிய பிணைக்காசை இழக்க நேரிடுவதுடன் அன்னாருடைய ஒப்பந்தக் கேள்வியும் நிராகரிக்கப்படும்.

8. ஒப்பந்தக் கேள்வி ஒன்றையாயினும், எல்லாவற்றையாயினும் நிராகரிக்கவும், ஒருவருட காலத்திற்கு மேற்படாத காலத்திற்கு ஒரு ஒப்பந்தக் கேள்வியை அனுமதிக்கவும் அரசாங்கத்திற்கு ஆட்சேபமற்ற அதிகாரமுண்டு.

செ. நிற்குணானந்தன்,
சமூக சேவை அதிகாரிக்காக.

சமூக சேவைப் பகுதி,
பாலதக்ஷ மாவத்தை,
காலி முகப்பு,
கொழும்பு 3,
1969 ம் ஆண்டு சனவரி மீ 30 ந் உ.

2–417—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841

---

## பொதுவேலைத் திணைக்களம்

1969 ம் ஆண்டு நாலந்தை மாவட்டத்திலுள்ள அரசாங்க கட்டிடங்களைப் பராமரித்தல் அக்கட்டிடங்களில் சிறு திருத்தங்களைச் செய்தல் ஆகிய வேலைகளுக்கு கேள்விப்பத்திரங்கள் அனுராதபுரம் பொது வேலைத் திணைக்கள வட மத்திய பகுதி கண்காணிப்புப் பொறியியலாளர் காரியாலய கேள்விச்சபையின் தலைவரால் 1969 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 12 ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. பொதுவேலைத் திணைக்கள நாலந்தை மாவட்டப் பிரதம நிர்மாண நிறைவேற்றுப் பொறிவலாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரங்களில், இணைப்படிவமாக கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப் படல் வேண்டும். வேண்டிய இதர விபரங்களை மேற்படி பொறிவலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். குறிக்கப்பட்ட வேலைக்கான நிர்மாண வடிவங்களை அப் பொறிவலாளரின் அலுவலகத்தில் பார்வையிடக்கூடியதாகவிருக்கும்.

3. பொதுவேலைத் திணைக்களத்தில் ரூபா 20,700 க்கும் குறையாத கட்டிட நிர்மாணத்திற்கென பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டும், அவர்கள் கேள்விக்கட்டணமாக ரூபா 25 செலுத்திய பற்றுச்சீட்டை 1969 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ம் திகதி வியாழக்கிழமை பி. ப. 4.30 மணிக்கு முன்னதாக மேலே குறிப்பிட்ட பொறிவலாளரின் பார்வைக்குக் காட்டுவதன் பின்னரே கேள்விப்பத்திரங்களை பெறுவதற்குத் தகுதிபெறுவர், குறித்த காலத்திற்குப் பின்னர் கேள்விப்பத்திரங்களை பெறவிரும்புபவர்கள் தாமதமாகும் ஒரு நாளுக்கோ அல்லது ஒரு நாளின் பகுதிக்கோ ரூபா 10 வீதம் மீளளிப்புச் செய்யப்படாத தாமதக் கட்டணத்தை மேலே குறிப்பிட்ட பொறிவலாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெறுவதன் பேரில் கேள்விப்பத்திரங்களை பெறக்கூடியவராவர்.

4. கேள்வியாளராக முன்வரும் ஒவ்வொரு விண்ணப்பகாரரும் கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னதாக தம் ஒப்பந்தக்காரப் பதிவுப் புத்தகத்தையோ அல்லது தகுதிகாண் கடிதத்தையோ குறிப்பிட்ட பொறிவலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்களுக்குரிய கட்டணத்தை கொழும்பு கோட்டையிலுள்ள பொது வேலைத் திணைக்களத்திலோ தவிர்ந்த இதர இடங்களிலுள்ள கச்சேரிகளிலோ கட்டலாம்.

எம். ஆர். பர்னந்து,
கண்காணிப்புப் பொறிவலாளர்,
வட மத்திய பகுதி.

கண்காணிப்புப் பொறிவலாளர் அலுவலகம்,
பொதுவேலைத் திணைக்களம்,
அனுராதபுரம்,
1969 ம் ஆண்டு பெப்புருவரி மீ 5 ந் உ.

2–396—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841

## பொது வேலைத்திணைக்களம்

அனுராதபுர மாவட்டத்தில் 1969 ம் ஆண்டில் "பீ" பிரிவில் உள்ள அரசாங்க கட்டிட பராமரிப்பு வேலைகளும் சிறிய திருத்தங்களும் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் அனுராதபுரம் பொது வேலைத் திணைக்கள வடமத்திய பகுதி கண்காணிப்பு பொறியியலாளர் காரியாலய கேள்விச்சபையின் தலைவரால் 1969 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 12 ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. பொதுவேலைத் திணைக்கள அனுராதபுர மாவட்டப் பிரதம நிர்மாண நிறைவேற்றுப் பொறிவலாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரங்களில், இணைப்படிவமாக கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப் படல் வேண்டும். வேண்டிய இதர விபரங்களை மேற்படி பொறிவலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். குறிக்கப்பட்ட வேலைக்கான நிர்மாண வடிவங்களை அப்பொறிவலாளரின் அலுவலகத்தில் பார்வையிடக்கூடியதாகவிருக்கும்.

3. பொதுவேலைத் திணைக்களத்தில் ரூபா 51,000/–க்கும் குறையாத கட்டிட நிர்மாணத்திற்கென பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டும், அவர்கள் கேள்விக்கட்டணமாக ரூபா 100/– செலுத்திய பற்றுச்சீட்டை 1969 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 27 ந் திகதி வியாழக்கிழமை பி. ப. 4.30 மணிக்கு முன்னதாக மேலே குறிப்பிட்ட பொறிவலாளரின் பார்வைக்குக் காட்டுவதன் பின்னரே கேள்விப்பத்திரங்களை பெறுவதற்குத் தகுதி பெறுவர்.

குறித்த காலத்திற்குப் பின்னர் கேள்விப்பத்திரங்களை பெறவிரும்புபவர்கள் தாமதமாகும் ஒரு நாளுக்கோ அல்லது ஒரு நாளின் பகுதிக்கோ ரூபா 10/– வீதம் மீளளிப்புச்செய்யப்படாத தாமதக் கட்டணத்தை மேலே குறிப்பிட்ட பொறிவலாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெறுவதன் பேரில் கேள்விப்பத்திரங்களை பெறக்கூடியவராவர்.

4. கேள்வியாளராக முன்வரும் ஒவ்வொரு விண்ணப்பகாரரும் கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னதாக தம் ஒப்பந்தக்காரப் பதிவுப் புத்தகத்தையோ அல்லது தகுதிகாண் கடிதத்தையோ குறிப்பிட்ட பொறிவலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்களுக்குரிய கட்டணத்தை கொழும்பு கோட்டையிலுள்ள பொது வேலைத் திணைக்களத்திலோ தவிர்ந்த இதர இடங்களிலுள்ள கச்சேரிகளிலோ கட்டலாம்.

எம். ஆர். பொன்னுந்து,
கண்காணிப்பு பொறிவலாளர்,
வட மத்திய பகுதி அனுராதபுரம்.

கண்காணிப்பு பொறிவலாளர் அலுவலகம்,
பொதுவேலைத் திணைக்களம்
அனுராதபுரம்,
1969 ம் ஆண்டு சனவரி மீ 31 ந உ.

2–324—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841

---

## பொது வேலைத்திணைக்களம்

அனுராதபுர மாவட்டத்தில் 1969 ம் ஆண்டில் "ஏ" பிரிவில் உள்ள அரசாங்க கட்டிடபராமரிப்பு வேலைகளும் சிறிய திருத்தங்களும் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் அனுராதபுரம் பொதுவேலை திணைக்கள வடமத்திய பகுதி கண்காணிப்பு பொறியியலாளர் காரியாலய கேள்விச்சபையின் தலைவரால் 1969 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 12 ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிவரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. பொதுவேலைத் திணைக்கள அனுராதபுர மாவட்டப் நிறைவேற்றுப் பொறிவலாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரங்களில், இணைப் படிவமாக கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வேண்டிய இதர விபரங்களை மேற்படி பொறிவலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். குறிக்கப்பட்ட வேலைக்கான நிர்மாண வடிவங்களை அப்பொறிவலாளரின் அலுவலகத்தில் பார்வையிடக்கூடியதாகவிருக்கும்.

3. பொதுவேலைத் திணைக்களத்தில் ரூபா 68000/–க்கும் குறையாத கட்டிட நிர்மாணத்திற்கென பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டும். அவர்கள் கேள்விக்கட்டணமாக ரூபா 100/– செலுத்திய பற்றுச்சீட்டை 1969 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ந் திகதி வியாழக்கிழமை பி. ப. 4.30 மணிக்கு முன்னதாக மேலே குறிப்பிட்ட பொறிவலாளரின் பார்வைக்குக் காட்டுவதன் பின்னரே கேள்விப்பத்திரங்களை பெறுவதற்குத் தகுதி பெறுவர்.

குறித்த காலத்திற்குப் பின்னர் கேள்விப்பத்திரங்களை பெறவிரும்புபவர்கள் தாமதமாகும் ஒரு நாளுக்கோ அல்லது ஒரு நாளின் பகுதிக்கோ ரூபா 10/– வீதம் மீளளிப்புச்செய்யப்படாத தாமதக் கட்டணத்தை மேலே குறிப்பிட்ட பொறிவலாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெறுவதன்பேரில் கேள்விப்பத்திரங்களை பெறக்கூடியவராவர்.

4. கேள்வியாளராக முன்வரும் ஒவ்வொரு விண்ணப்பகாரரும் கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னதாக தம் ஒப்பந்தக்காரப் பதிவுப் புத்தகத்தையோ அல்லது தகுதிகாண் கடிதத்தையோ குறிப்பிட்ட பொறிவலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்களுக்குரிய கட்டணத்தை கொழும்பு கோட்டையிலுள்ள பொது வேலைத் திணைக்களத்திலோ தவிர்ந்த இதர இடங்களிலுள்ள கச்சேரிகளிலோ கட்டலாம்.

எம். ஆர். பொன்னுந்து,
பொதுவேலைத் திணைக்கள அதிபர் (மத்தியவலயம்)
கண்காணிப்பு பொறிவலாளர்,
வடமத்திய பகுதி, அனுராதபுரம்.

கண்காணிப்பு பொறிவலாளர் அலுவலகம்,
பொதுவேலைத்திணைக்களம்,
அனுராதபுரம்,
1969 ம் ஆண்டு சனவரி மீ 31 ந உ.

2–325—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841

---

## தபால் தந்திப் பகுதி

பாவனைக்குதவாத களஞ்சியப் பொருட்களை விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள், கொழும்பு 1, புதிய மத்தியமாற்று நிலையக் கட்டிடம், பிரதான தந்திப் போக்குவரத்துப் பொறியியலாளர் அலுவலகத்தின் கேள்விப் பத்திரச் சபைத் தலைவரால், 1969 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 13 ந் திகதி மு. ப. 10 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கோள்விப்பத்திரங்கள் கொழும்பு 1, கோட்டை புதிய மத்திய மாற்று நிலையக் கட்டிடம் என்ற விலாசத்திலுள்ள தந்தி தொலைபேசி பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்ற பத்திரங்களில் இரட்டைப் பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்டுள்ள விலாசதாரரிடமிருந்து இக்கேள்விப்பத்திரங்களின் விபரங்கள் அறியலாம்; தகவல்கள் பெறலாம்; பரிசீலனை செய்யலாம்.

கொழும்பு 1, மத்திய தந்திக் கந்தோர், தந்திக் காசாளரிடமோ எந்தப் தபால் கந்தோர் தலைவரிடமோ கேள்விப்பத்திரப் பொறுப்புப் பணமாக ரூபா 100 கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டைத் தந்தி தொலைபேசிப் பிரதான பொறியியலாளர் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும் கேள்விப் பத்திர விண்ணப்பதாரருக்கே கேள்விப்பத்திரச் சாதனங்கள், 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 6 ந் திகதி பி. ப. 4 மணிவரை வழங்கப்படும்.

ஜி. இ. டி. எஸ். எல்லாவல,
பிரதான தந்திப்போக்குவரத்துப் பொறியியலாளர்,
தபாற்கந்தோர்கள் தலைமை அதிபதியும்
தந்திப் போக்குவரத்து அதிபருக்குமாக.

பிரதான தந்திப் போக்குவரத்துப்
பொறியியலாளர் அலுவலகம்,
புதிய மத்திய தந்திக் கந்தோர்,
தபாற் பெட்டி இல. 503
கொழும்பு 1.

2–321—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841

---

## உணவுப் பகுதி

### பாவனைக்குகந்ததல்லாத சணற் சாக்குகள் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள்

சாமேஸ் களஞ்சியத்திலிருக்கும் சுமார் 27,039 சணற் சாக்குகள் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள் 21.2.1969 வெள்ளிக்கிழமை பி. ப. 2.30 மணிவரை 330, யூனியன் பிளேஸ், கொழும்பிலுள்ள உணவுக் காரியாலயத்தின் கோரிக்கைச் சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கோரிக்கைகள் ரூபா 300 கட்டி இவ்வலுவலகத்திலிருந்து பெறும் பத்திரத்திலேயே விண்ணப்பிக்கவேண்டும். இக்கோரிக்கைகள் பற்றிய மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஆ. மதியாபரணம்,
உணவு அதிகாரிக்காக.

330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு பெப்புருவரி மீ 5 ந உ.

2–382—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841

## சுகாதாரத் திணைக்களம்—குருநாகல் பகுதி

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1969 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சுகாதார சேவை அத்தியட்சகர், குருணாகல், ஏற்றுக்கொள்வார்.

2. (க) **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலோ எனது பெயரில் கட்டிய பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லவிட்டால் பதிவு செய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேலே குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்பவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்கள் எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் கீழ்க்காணும் காரியாலயங்களில் பெற்றுக்கொள்ளலாம் :—சுகாதார சேவை அத்தியட்சர் காரியாலயங்கள் அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா, குருணாகல். கேள்விகள் மூடப்படும் தினத்திற்கு முந்தினம் நண்பகல் 12 மணிக்குப்பின் கேள்விப் பத்திரங்கள் கொடுக்கப்படமாட்டா.

தகுதி விபரங்களையோ, அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், குருணாகல் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்ப வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடதுபக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும், முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது ஒப்பந்த விநியோகக் கணக்காளரிடம் கொடுத்தால் அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் நாலாவது பத்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை பத்து மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும், தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம்பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்தபின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப் படிவங்களில் உள்ள சாப்பாட்டுப் " பீ " அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரத்தில் அட்டவணை " சீ " யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருட்களுக்கும் வீதங்களைக் குறிப்பிட வேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி, அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப் படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. கேள்விகள் மூடப்படும் திகதியிலிருந்து ஆறுமாத கால எல்லை வரைக்கும் கேள்விக்காரர்கள் தங்கள் கேள்வி வீதங்களை ஏற்றுக்கொள்வதற்கு இடமளிக்க வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை மீள்வதற்கு இடமளிக்கப்படமாட்டார்கள்.

10. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்திலே பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி, எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

11. **பிணை வைப்புப் பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப்பணத்தைக் கட்டியபின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவேண்டும்.

12. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

13. நோயாளர்களாகவும் வேலைக்காரர்களாகவும் ஒப்படைக்கப்பட்ட பங்கீட்டுச்சிட்டைகளுக்கு உணவிலாகாவிலிருந்து இனமாகவோ அல்லது 19.12.66 ல் இருந்து நடைபெறும் விலைக்கோ அரிசி பெற்றுக்கொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர்கள் தாபனப் பொறுப்பதிபரால் உத்தரவுச் சீட்டுகள் வழங்கப்படுவார்கள்.

14. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப் படிவங்களில் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும். கேள்விப்படிவத்தில் உள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்க வேண்டும்.

எல். என். இராஜேந்திரு,
சுகாதார சேவை அத்தியட்சகர்.

குருணாகல்,
1969 ம் ஆண்டு பெப்பிரவரி மீ 6 ந் உ.

### குறித்த அட்டவணை

| (1) தாபனங்கள் | (2) கேள்விக் கட்டுப் பணம் | (3) பிணை வைப்புப் பணம் | (4) கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரமும் | (5) உணவுகள் அண்ணளவான தொகைகள் — வேலைக்காரர்களுக்கு — மீன் | மா. இ. | கருவாடு | காய்கறி | நோயாளிகளுக்கு — மீன் | மா. இ. | கருவாடு | காய்கறி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | | | | | | | | | |
| 1. பின்கிரிய, இ. வை. .. | 100 .. | 400 .. | 27.2.69 காலை 10 மணி | 200 .. | 200 .. | 200 .. | 800 .. | 400 .. | 400 .. | 400 .. | 1,600 |
| 2. கொஸ்கேன, பி. வி. .. | 100 .. | 300 .. | | 100 .. | 100 .. | 400 .. | 400 .. | 50 .. | 50 .. | 50 .. | 200 |
| 3. சந்தலங்காவ, பி. வி. .. | 100 .. | 300 .. | | 100 .. | 100 .. | 100 .. | 400 .. | 50 .. | 50 .. | 50 .. | 200 |

2-386—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841

## தேசிய வீடமைப்புத் திணைக்களம்

### பம்பலப்பிட்டி வீடமைப்புத்திட்டம்

### மின்சார விசிறி சீராக்கிகள் 56" துடுப்பைத் திருத்துவதும் திரும்பச் சுற்றி வைத்தலும்

தேசிய வீடமைப்புத் திணைக்களக் கேள்விச் சபைத் தலைவரால் மின்சார விசிறி சீராக்கிகள் 56" துடுப்பைத் திருத்துவதற்கும் திரும்பச் சுற்றி வைத்தற்காக 1969 ம் ஆண்டு மார்ச்சு மீ 7 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிவரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்வியாளர்கள் சமுக மளிக்கலாம்.

கேள்விப் பத்திரங்கள் இத்திணைக்களக் கண்காணிப்புப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளாக அனுப்பப்பட வேண்டும். மேலும் தேவையான விபரங்கள்யாவும் இவரிடமிருந்து பெறலாம்.

கேள்விக் கட்டுப்பணமாக இத்திணைக்களச் சிறுப்பரிடம் ரூபா 100/- செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும் சமர்ப்பிக்கும் ஒப்பந்த காரர்களுக்கு 1969 ம் ஆண்டு பெப்புருவரி மீ 27 ந் திகதி நண்பகல் 12 மணி வரை கேள்விப்படிவங்கள் வழங்கப்படும்.

து. இராஜேந்திரா,
தேசிய வீடமைப்பு ஆணையாளருக்காக.

தேசிய வீடமைப்புத் திணைக்களம்,
த. பெ. இல. 544,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு ஜனவரி மீ 24 ந் வ.

2–450—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல 14,841

---

## காணிப்பகுதி ஆணையாளர்

### மாத்தறை மாவட்டத்துக்குள் (1) கொஸ்கஹஹேன ரோட் (போக்கு), (2) அதபத்துகந்த ரோட், (3) தேவாலகம-மஹமடவல ரோட்—2ம் மைல், (4) படேஹேன-புஸ்ஸஹேன தண்ணீர் விநியோகத் திட்டம்

பொது வேலை, நீர்ப்பாசன அல்லது கல்வி டிபார்ட்மெண்டிலே ஒழுக்காணும்படி பகிரங்க வேலைப்பகுதி அல்லது நீர்ப்பாசனப் பகுதி அல்லது கல்விப் பகுதி வேலைகள் நிமித்தம் (அ) அரசாங்க கொந்துருத்துக் காரர், (ஆ) கூலியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மூலம் கேள்விப் பத்திரங்கள் மேற்படி வேலைகள் சம்பந்தமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

2. இரண்டு பிரதிகள் ஒரே உறையில் சீல் வைக்கப்பட்டுத் தெளிவாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரங்கள் " தலைவர், காணியாளர் இலாகா கேள்விப் பத்திரச் சபை, த. பெ. இலக்கம் 500, கொழும்பு " என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள் கொழும்பிலுள்ள காலி மைதானத்திலுள்ள செயலாளர் அலுவலகத்திலுள்ள 357 ஆம் இலக்க அறையில் இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடப்பட வேண்டும், அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் அடங்கிய தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் (திஸ்திரிக் பெயர், இன்னும் வேலையின் பெயர் குறிப்பிடவும்) சம்பந்தமான கேள்விப்பத்திரம் என்று குறிப்பிடல் வேண்டும். 1969.3.7 ந் திகதி பி. ப. 2.30 மணிக்குமுன் கேள்விப் பத்திரச் சபைத் தலைவருக்குக் கிடைக்கும்படி அனுப்பப்படல் வேண்டும். அதே நேரத்தில் கேள்வியாளர்கள் பிரசன்னமாய் இருக்கலாம்.

5. 1969.3.1 ந் திகதி பகல் 12 மணி வரை மாத்தறைக் கச்சேரியிலிருந்து கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். நியமிக்கப்பட்ட பத்திரங்களில் விண்ணப்பிக்காவிட்டால் ஆலோசனைக்கு ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

6. கேள்விக்காரர்கள் பிழை திருத்தங்கள் செய்திருந்தால் அழித்திருந்தால் ஒவ்வொரு திருத்தங்களும் கேள்விப்பத்திரகாரரால் ஒப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

7. கேள்விப்பத்திரங்கள் விநியோகிப்பதற்கு முன் ரூபா 50 வைப்புப் பணமாக மாத்தறை மாவட்ட அரசாங்க அதிபர் பேரில் கட்டப்பட்ட பற்றுச்சீட்டுச் சமர்ப்பிக்கும்போது தேவையான கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். முதல் பந்தியில் குறிப்பிட்டுள்ள சங்கங்கள் இவ்வைப்புப் பணம் கட்டவேண்டிய அவசியமில்லை.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்குரியவர்கள் இது பற்றியவர்களுக்கு அறிவித்தல் கடிதத்திலுள்ள தினத்திலிருந்து 10 நாட்களுக்குள் இதற்குரிய பிணைத் தொகையைக் கட்டி ஒப்பந்தத்தைச் செய்ய மறுத்தால், அன்னாரின் கேள்விப் பத்திர வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

9. கேள்விப் பத்திரங்களை ஒப்புக் கொண்டபடிக்கு கேள்விக்காரர்களால் கொடுக்கப்பட்ட விலாசத்துக்கு அனுப்பினால், கேள்விக்காரர்களுக்கு கிடைத்திருக்குமென்று நம்பப்படும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதின் பிறகு மற்றும் வைப்புப் பணங்களைத் திருப்பிக் கொடுக்கப்படும்.

10. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வியாளர்கள் முழுத் தொகையில் 5 சத வீதத்தை, பிணைத் தொகையைக் கட்டி வேலை திருப்திகரமாக குறிப்பிட்ட காலத்தில் முடித்துக் கொடுப்பதற்கென, மாத்தறை அரசாங்க அதிபருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும். முதல் பந்தியில் குறிப்பிட்டுள்ள சங்கங்கள் இவ்வைப்புப் பணம் கட்ட வேண்டிய அவசியமில்லை.

11. எதேனும் ஒரு கேள்வியை (டெண்டர்) அல்லது அதன் பகுதியை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ, அரசாங்கத்துக்குப் பூரண அதிகார முண்டு.

12. கேள்விப் பத்திரச் சபையின் அனுமதியில்லாமல் ஏற்கப்பட்ட கேள்விக்காரர் வேறு யாராகினும் ஒருவருக்கு வேலையை ஒப்படைத்தல் அல்லது ஒரு பாகத்தைக் கூலிக்குச் செய்வித்தல் கூடாது. அப்படிக் கேள்விக்காரர்கள் யாராகினும் வேறொருவருக்கு அட்ரோனி அதிகாரத்தைக் கொடுத்தால், அதை நிராகரிக்க அரசாங்கத்துக்கு அதிகாரமுண்டு.

13. கொந்துருத்துக்காரர் கையின் கீழ் வேலை செய்வோர் ஒருவனைக் குறித்து ஏதும் தகராறுகள் இருப்பின், மாத்தறை அரசாங்க அதிபருக்கு கடித மூலம் அன்னாரின் சேவையை நிறுத்தும்படி கொந்துருத்துக் காரருக்கு அறிவிக்க அதிகாரமுண்டு.

14. கொந்துருத்துக்காரர்கள் இலங்கை அரசாங்க சார்பில் திணைக்கள அதிபர் உடன் கைச்சாத்திடப்படலாம். இலங்கை அரசாங்க சார்பில், கொந்துருத்துக்காரருடன் கையொப்பமிடுவோரின் தராதரம் கொடுக்கப் படல் வேண்டும்.

15. கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்போர் இதற்குமுன் பாரம் எடுக்கப்பட்ட கொந்துருத்து வேலையில் ஈடுபட்டிருக்கும் வேலை சம்பந்தமாக மேற்பார்வையாளர் அதிகாரிகளிடமிருந்து அத்தாட்சிப் பத்திரம், வைப்புப் பணம் பற்றுச்சீட்டுடன் போதிய காலத்துக்குள் மாத்தறை மாவட்ட அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

16. யாராகினும் ஒரு கேள்விப் பத்திரத்தை ஏற்றுக் கொள்ளும் தறுவாயில் பிணை தேவைப்பட்டால், தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளர் அவசியமான காரணங்களைப் பூர்த்தி செய்யத் தயாராயிருத்தல் வேண்டும்.

17. அரசாங்க வேறு திணைக்களத்தில் கொந்துருத்து வேலையில் ஈடுபட்டிருக்கும் கேள்வியாளர் வேறு வேலை செய்யும் திணைக்களத்தின் பெயரும் அதன் மாவட்டத்தையும் தரல் வேண்டும்.

18. அரசாங்க வேலை திருப்திகரமாகச் செய்யப்படாத ஒப்பந்தக்காரரின் பட்டியலில் கொந்துருத்துக் கேள்வியாளரின் பெயர் இருந்தால் அன்னாரின் கேள்விப் பத்திரத்தை நிராகரிக்கப்படும்.

19. கொஸ்கஹஹேன ரோட் (போக்கு) இன்னும் படேஹேன-புஸ்ஸஹேன தண்ணீர் விநியோகத் திட்டம் சம்பந்தமாக ரூபாய் 20,000 க்குக் குறையாமலும், தேவாலகம-மஹமடவல ரோட்—2 ம் மைல் சம்பந்தமாக ரூபா 50,000 க்குக் குறையாமலும், அதபத்துகந்த ரோட் சம்பந்தமாக ரூபா 60,000 க்குக் குறையாமலும் ரெஜிஸ்டர் (பதிவு) ஆயிருத்தல் வேண்டும்.

பீ. டபிள்யு. சீ. டி சில்வா,
அரசாங்க அதிபர்,
மாத்தறை மாவட்டம்.

மாத்தறைக் கச்சேரி,
1969 ம் ஆண்டு பெப்புருவரி மீ 5 ந் வ.

2–416—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841

## கமத்தொழிற்சேவை இலாகா

### தானியக் களஞ்சியங்கள் கட்டுவதற்கான கேள்விகள்

தானியக் களஞ்சியம் கட்டுவதற்கான கேள்விகள், 42, சேர் மாக்கஸ் பேஜநந்து வீதி, கொழும்பு 7, இல் உள்ள கமத்தொழிற் சேவை இலாகா வின் கேள்விச் சபைத் தலைவரால் 1969 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 7 ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக் கொள்ளப் படும். நிலைய விபரங்கள் பின்வருமாறு :—

| மாவட்டம் | குறிப்பிடம் | கட்டிடத்தின் தொகை |
|---|---|---|
| மொனராகலை | பிபிலை | ஒன்று (1) கட்டிடம் |

2. கேள்விகள் கட்டுப்பணமாக ரூபா. 250/– (இருநூற்றி ஐம்பது) ஐ 60 கோட்டன் இடம், கொழும்பு 7, இல் உள்ள கணக்காளரிடம் கட்ட வேண்டும். அல்லது கொழும்பிற்கு வெளியேயுள்ள வேறு எந்தக் கச்சேரியிலோ கட்டி பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து, 42, சேர் மாக்கஸ் பேஜநந்து வீதி, கொழும்பு 7, இல் உள்ள கமத்தொழிற் சேவை ஆணை யாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப்பத்திரப் படிவங்களில் மாத்திரமே கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும். அவை இரு பிரதிகளில் இருக்க வேண்டும்.

3. ரூபா. 30,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையில் அரசாங் கத்தில் பதிவு செய்யப்பட்ட கட்டிட ஒப்பந்தக்காரர் மாத்திரமே கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர். அவர்கள் தங்கள் " பதிவுப் புத்தகத்தைக் காட்டி " படிவங்களை, 1969 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 6 ம் திகதி பகல் 12 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலமாக விண்ணப்பம் செய்வோர் தமது விண்ணப்பம் எனக்குக் குறித்தகால எல்லைக்குள் கிடைக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும்.

4. 42, சேர் மாக்கஸ் பேஜநந்து வீதி, கொழும்பு 7, இல் உள்ள கமத் தொழிற் சேவை ஆணையாளரிடமிருந்து மேலதிக விபரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

வி. தி. நவரத்ன,
கமத்தொழிற் சேவை ஆணையாளருக்காக.

கமத்தொழிற் சேவை இலாகா,
42, சேர் மார்க்கஸ் பேஜநந்து வீதி,
கொழும்பு 7,
1969 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ம் திகதி.

2–379—14.2.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,841

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### 10 மலைதுளை பொறிகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்

பின்வரும் மலைதுளைப் பொறிகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங் களை 1969.3.7 ந் திகதி மு. ப. 11 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக்கொள்வார்.

**எண்ணிக்கை 10**—சதுரமொன்றிற்கு 80 இருத்தல் வீதம் கொண்ட காற்றினால் இயங்கக்கூடிய மலைதுளை பொறிகள்.

அளவு சுமார் 38 இருத்தல் எடையுள்ளதும், 10 அடி ஆழத்திற்குத் துவாரத்தைத் துளைக்கப் பொருத்தமுள்ளதாகவும் இருக்க வேண்டும். உலர்ந்த விடத்தில் ஏற்றவாறு துளைக்கக் கூடியதாக $\frac{3}{4}'' \times 3\frac{1}{4}''$ நீளமுள்ள கூர்முனை (சக்) துளைகருவியில் பொருத்தப் பட்டிருக்க வேண்டும்.

2. கேள்விக்காரர்கள் பின்வருவனவற்றை வழங்குவதற்காகக் குறிக் கலாம். (அ) முன்னைய இருப்பு. (ஆ) கப்பலிலிருந்து உட்கொணரப் பட்டு இருலப்பனை மத்திய வேலைத்தளத்தில் விநியோகிக்கப்பட்டவை. கேள்விக்காரர்கள் முந்திய/விநியோகக் காலத்தைக் குறிப்பிடலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 25/– கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ம் இலக்கக் கணக்கில் வரவுவைக்கும் பொருட்டு இலங்கை வங்கி(யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவது ஒரு கச்சேரியிலோ செலுத்தி, 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 6 ந் திகதி நண்பகல் 12 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப் பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள் விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப்பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப் பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடைய முன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களினும் " 10 மலைதுளைப் பொறிகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் " எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1, என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத் தபாலினும் அல்லது கேள்விக் காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலமும் நேரடியாக வும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டி யிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்ற முடியாத வையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்பு நோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மீளப் பெற்றுக்கொள்ளக் கூடாது.

7. கேள்விக்காரர்கள் விநியோகம் சம்பந்தமான முழு விபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக்கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்ற மிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக் காட்ட வேண்டும்.

8. தேர்வுபெற்ற கேள்விக்காரர் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெற முடியாது. தவறிய கேள்விக்காரர் பட்டிய லில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1969.3.7 ந் திகதி முற்பகல் 11 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமூகமளிக்கலாம்.

10. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றை யேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

11. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் காணி அபிவிருத்தித் திணைக்கள அதிபரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1969 ம் ஆூ பெப்ரவரி மீ 7 ந் உ.
CT/2/354.

2–421—14.2.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,841

# கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

## கிழக்கிலங்கைக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### கேள்விப்பத்திர முடிவுகள்

| கேள்விப் பத்திரத்தில் கட்டளையிடப்பட்ட தொகை | விடயம் | முடிவுற்ற திகதி | கட்டளையிடப்பட்ட தொகை | கிடைக்கப் பெற்றவிலைக் குறிப்பீடுகளின் எண்ணிக்கை | சித்தியடைந்த கேள்விப் பத்திரகாரர் | எந்த நாட்டின் உற்பத்தி | விலை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. 600 நீ/தொ .. | பிளீச்ட் கிராப்ற் பல்ப் | 7. 6.68 .. | 600 நீ/தொ .. | 11 .. | திருவாளர்கள் எலோப் ஹான்ஸன் கோதபோக், சுவீடன் | சுவீடன் .. | சுவீடன் இரு. 870/- நீ.தொ. ஒன்று சீ. ஐ. எப்., கொழும்பு |
| 2. 300 நீ/தொ. .. | அன்பிளீச்ட் கிராப்ற் பல்ப் | 7. 6.68 .. | 300 நீ/தொ .. | 9 .. | திருவாளர்கள் எக்மன் அன் கம்பனி லிமிடெட், கோதன்பேர்க், சுவீடன் | சுவீடன் .. | £ 56/18/ - நீ. தொ. ஒன்று சீ. ஐ. எப்., கொழும்பு |
| 3. 100 நீ/தொ .. | ரேசின் .. | 31. 8.68 .. | 100 நீ/தொ .. | 20 .. | திருவாளர்கள் மிற்சுய் அன் கம்பனி லிமிடெட், ஒசாகா சென்ரல், ஜப்பான் | ஜப்பான் .. | £ 90/- /- நீ. தொ. ஒன்று சீ. ஐ. எப்., கொழும்பு |
| 4. 20 நீ/தொ .. | ஸ்ராச் .. | 31. 8.68 .. | 20 நீ/தொ .. | 22 .. | திருவாளர்கள் ஹேர்மன் பௌல்சன் ஹம்பாக், மேற்கு ஜெர்மனி | மேற்கு ஜெர்மனி | டீ.எம். 1109.85 ஒன்று சீ. ஐ. எப்., கொழும்பு |
| 5. 1000 நீ/தொ .. | சுறுள்களிலுள்ள கிராப்ற் கடதாசி | 25.10.68 .. | 250 நீ/தொ .. | 21 .. | திருவாளர்கள் பேர்சி வான் ஸ்கவுல்ஸ் அன் கம்பனி, சுவீடன் | சுவீடன் .. | £ 80/13/7 நீ. தொ. ஒன்று சீ. ஐ. எப்., கொழும்பு |
| | | | 250 நீ/தொ | | திருவாளர்கள் மோபேர்க் அன் கம்பனி, கோதபோக், சுவீடன் | சுவீடன் .. | ஷை |
| | | | 250 நீ/தொ | | திருவாளர்கள் எலோப் ஹன்சன் கோதபோக், சுவீடன் | சுவீடன் .. | ஷை |
| | | | 250 நீ/தொ | | திருவாளர்கள் ஸ்காண்டினேவியன் ஓவசீஸ் பேப்பர் கம்பனி, அக்ரிஓபோலாக், சுவீடன் | சுவீடன் .. | ஷை |
| 6. 600 நீ/தொ .. | கந்தகம் .. | 31.10.68 .. | 600 நீ/தொ .. | 29 .. | திருவாளர்கள் கெமிஸ்சி இன்டஸ்ரியலி, கெசல்ஸ் சாப்ற், பிராங்பேட், அம்மெயின், மேற்கு ஜெர்மனி | மேற்கு ஜெர்மனி | யூ. எஸ். 96.25 மெ.தொ. ஒன்று சீ. ஐ. எப்., கொழும்பு |
| 7. 600 நீ/தொ .. | அலுமினிய சல்பேற் | 15.11.68 .. | 600 நீ/தொ .. | 45 .. | திருவாளர்கள் சிங்கப்பூர் இரசாயனக் கூட்டுத்தாபனம் லிமிட்டெட், சிங்கப்பூர் | சிங்கப்பூர் .. | £ 22/9/- நீ. தொ. ஒன்று சீ. ஐ. எப்., கொழும்பு |

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கைக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

135, யூனியன் இடம்,
கொழும்பு 2.

2–439—8.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## இலங்கை அரச கடற்படை

### பழைய ஓடுகளின் விற்பனை

பழைய ஓடுகளின் விற்பனையொன்று 1969, பெப்புருவரி மாதம் 26 ஆம் திகதி புதன்கிழமையன்று மு. ப. 10.00 மணிக்குக் கொழும்பு, கோல் பக் வீதியிலுள்ள இலங்கை அரச கடற்படைத் தலைநிலைய இடைப்போக்குக் களஞ்சியத்திற்கண்மையில் (" ற்ரான்சிற் ஸ்ரோர்ஸ் ") நடைபெறும்.

இப்பழைய ஓடுகள் பரிசோதனையின் பொருட்டுக் கிடைக்கக்கூடிய வேளைகள் (ஏல) விற்பனைக்கு இரண்டு மணித்தியாலங்களுக்குமுன், அதாவது, 1969, பெப்புருவரி மாதம் 26 ஆம் திகதி புதன்கிழமையன்று முற்பகல் 8.00 மணிமுதல் முற்பகல் 10.00 மணிவரை ஆகும்.

(ஏல) விற்பனை முடிவடைந்த உடனேயே, முழுக் கட்டணமுஞ் செலுத்தப்படவேண்டியிருப்பதுடன் அதே நாள் பி. ப. 4.00 மணிக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட ஓடுகள் எடுத்துச் செல்லப்படவும் வேண்டும்.

ஆர். கதிர்காமர்,
கடற்படைத் தளபதி.

தலைமைக் காரியாலயம்,
இலங்கை அரச கடற்படை,
கொழும்பு,
1969 ம் ஆண்டு சனவரி மீ 30 ந உ.

2–414—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841

## கடற்றொழில் திணைக்களம்

**தள்ளப்பட்ட பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை**

1969.2.21 ந தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நீர்கொழும்பு கடற்கரைத் தெரு, கடற்றொழிற் பயிற்சி நிலைய வளவில் இயந்திர, புளொக், சிலிண்டர் சிலீவ், பார்சண் துணைப்பொறிப் பெட்டி, றொக்கர் ஆர்ம் தாங்குமுனைப்பு, சிலிண்டர் முகப்பு, விசையாள் சில்லு, ஒற்றைச் சுழற்றித் தண்டு, ஊளச்சு புளொக்கின்பாகம், தண்ணீர் பம்பி, ரைமிங் கேஸ் கவர், லிஸ்ரர் தொடக்கு கைப்பிடி, வாயு உருளைகள், கொதிகலக் குழாய், தைனமோ, கவர்ணர் உறை, நிடக்ஷன் துணைப்பொறி, உறைகளும் மூடிகளும், சுழற்றித் தண்டு எண்ணெய் சீல் அந்தம், இயந்திரப் பக்க உறை, ஊளச்சு இழுவிசை வில், றொக்கர் ஆம் கூட்டம், நங்கூரம், இயந்திர சம்ப், டியூற்ஸ் காற்று சுத்திகை, எரிபொருள் தாங்கி (குபோட்டா, லிஸ்ரர், அன்சாணே, யண்மார்), அமைதியாக்கி, சுழற்றிப் பெட்டி (சம்ப்), இயந்திர முகப்பு மூடி, மோட்டார், வெளிப்போக்கு குழாய், மறைன் டீசல் இயந்திரங்கள் (குபோட்டாவும் லிஸ்ரரும்), ஹோல்ட் பல்ப் இயந்திரம், ஊளச்சுப் பெட்டி முழுமையாக, மறைண் டீசல் கவன்றி சுழற்றிப்பெட்டி, 6 சிலிண்டர் முகப்புகள் ரியூனிங் சில்லுடன், தள்ளப்பட்ட பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை நடைபெறும். இப்பொருட்களை விற்குமுன் பரிசீலனை செய்வதற்கு, இதற்கென அறிவுறுத்தப்பட்ட நீர்கொழும்பு, கடற்றொழில் பயிற்சி நிலையத்து கடற்றொழில் பரிசோதகருடன், அலுவலக நேரத்தில் முன்னறிவித்தலுடன் தொடர்பு கொள்ளவும்.

விற்பனையில் கொள்வனவு செய்தவர்கள், பணம் கட்டி பொருட்களை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும்.

கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு 3.

உ–322—14.2.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,841

# ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும்

*வவுனியா மாவட்ட கள்ளுத்தவறணை குத்தகை மறு விற்பனை*
*1.3.69 தொடக்கம் 30.9.69 வரை*

இதில் காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் சொல்லப்பட்ட வவுனியா மாவட்ட கள்ளுத் தவறணைகளில் 1. 3. 69 தொடக்கம் 30. 9. 69 வரைக்குமான கால எல்லை வரை சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதன் பொருட்டு சிறப்புரிமை வழங்குவதற்காக நடைமுறையில் இருந்துவரும் பொது விதிகளுக்கமையவும் 13. 9. 68 ம் தேதி பிரசுரிக்கப்பட்ட 14,819 .ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் காணப்படும் கள்ளுத் தவறணை குத்தகை விதிகளுக்கமையவும் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கேள்விப்பத்திரங்கள் " வவுனியா மாவட்ட கள்ளுக் குத்தகை 1968/69 " என்று குறிப்பிட்டு பெப்பிரவரி மாதம் 23 ம் திகதி காலை அட்டவணையில் குறிப்பிட்ட நேரத்திற்கு முன் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

3. ஒவ்வொரு தவறணைக்கும் தனித்தனிக் கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும். எவரும் எந்த ஒரு தவறணைக்காவது ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விப்பத்திரங்கள் அனுப்புவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். ஐந்து பேருக்கதிகமானவர்கள் கூட்டாகச் சேர்ந்து எந்த ஒரு தவறணைக்கும் கேள்விப்பத்திரம் அனுப்பமுடியாது.

4. கேள்விக்காரர்.—

(அ) நேர்முகத்தில் சமுகம்தராவிட்டால்,

(ஆ) எந்தப்பகுதியில் அவருடைய காணி இருக்கிறதோ அந்தப்பகுதி காரியாதிகாரியிடம் பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத்துடன் கேள்விப்பத்திரம் அணைக்காவிடில்,

(இ) பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத்தில் சொல்லப்பட்ட காணியின் பெறுமதி கேள்விப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட தொகையில் 25% குறைந்தால் அவரது கேள்விப்பத்திரம் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

(ஒன்றுக்கு மேற்பட்ட தவறணைக்குக் கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கும் கேள்விக்காரர் அதே வேளையில் அதே ஆண்டுக்குரிய வேறு தவறணைக்கு கேள்விப்பத்திரத்துடன் பெறுமதி அத்தாட்சிப்பத்திரத்தின் மூலப்பிரதியை அணைத்திருந்தால் அப்பத்திரத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றை இணைக்கலாம்). அத்தகைய ஒவ்வொன்றிலும் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பெறுமதிப்பத்திரப் பிரதி, மூலப்பிரதி இணைக்கப்பட்ட தவறணையின்பெயரையும் இலக்கத்தையும் கொண்ட குறிப்பை உள்ளடக்கியிருக்க வேண்டும்).

5. கேள்விப்பத்திரங்களை பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கலாம். அல்லது வவுனியா கச்சேரியிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் போடலாம். ஆனால் கேள்விப்பத்திரம் எந்தத் தவறணைக்குத் தாக்கல் செய்யப்படுகின்றதோ அந்தத் தவறணையின்பெயரும் இலக்கமும் என்வலப்பின் இடது பக்க மூலையில் பொறிக்கப்பட்டு, என்வலப்பு சீல் பண்ணப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் தனித் தனி என்வலப்பில் வைத்து மேற்காட்டிய குறிப்புக்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

6. தவறணை விற்பனை நிபந்தனைக்கு அமைவாக ஒவ்வொரு விண்ணப்பகாரரும் ரூபா 1,000 கட்டுப்பணமாகக் கட்டியதற்கு அத்தாட்சியாக கச்சேரிப்பற்றுச் சீட்டு இணைக்கப்பட வேண்டும். கட்டுப்பணங்கள் வவுனியா அரசாங்க அதிபரின் பெயரில் கட்டல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர் தெரிவு செய்யப்பட்டவுடன் விற்பனை நிபந்தனைகளுக்குக் கையொப்பமிடத் தவறினால் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

7. எந்த ஒரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ நிராகரிக்கவோ வவுனியா அரசாங்க அதிபருக்குமாத்திரம் உரிமையுண்டு.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர், விற்பனை நிபந்தனையிலும், ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடவும், அரசாங்க அதிபரால் குறிக்கப்பட்ட பிணைப்பணத்தை செலுத்தவும் தேவையான முத்திரைகளைக் கொடுக்கவும் தயாராயிருத்தல் வேண்டும்.

9. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர், குத்தகைக்காரர் என்று அறிவிக்கப்பட்ட மாத்திரத்தில், தான் எந்த இடத்தைத் தவறணையாகத் தெரிவு செய்கிறார் என்பதை வவுனியா அரசாங்க அதிபருக்கு அறிவித்து அவரிடமிருந்து அதற்கான அனுமதியையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

10. மேற்கொண்டு விபரங்கள் அறிய வேண்டுமாயின் வவுனியா கச்சேரிக்கு மனுப்பண்ணிப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட அட்டவணை

**வவுனியா மாவட்ட கள்ளுத் தவறணைகள்**
**(1.3.69—30.9.69)**

| இலக்கமும் இடமும் | தவறணை உள்ளூர்ப் பகுதி | கேள்வி ஏற்கும் நேரமும் திகதியும் |
|---|---|---|
| 2. வலையன்மடம் .. | வலையன்மடம் கிராம எல்லைக்குள் | 8.2.1969 காலை 10மணி |

*பி. சி. பெரேரா,*
*அரசாங்க அதிபர்,*
*வவுனியா மாவட்டம்.*

*கச்சேரி, வவுனியா,*
*10. 2. 69.*

2-547—14.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,841

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி** சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் **வர்த்தமானி** வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1969**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **சனவரி** .. | 3.1.69 | வெள்ளி .. | 24.12.68 | செவ்வாய் | பி. ப. 3.30 |
| | 9.1.69 | வியாழன் .. | 3. 1.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 16.1.69 | வியாழன் .. | 9. 1.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 24.1.69 | வெள்ளி .. | 16. 1.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 31.1.69 | வெள்ளி .. | 24. 1.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| **பெப்புருவரி** .. | 7.2.69 | வெள்ளி .. | 31. 1.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 14.2.69 | வெள்ளி .. | 7. 2.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 21.2.69 | வெள்ளி .. | 14. 2.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 27.2.69 | வியாழன் .. | 20. 2.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| **மாச்சு** .. | 7.3.69 | வெள்ளி .. | 27. 2.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 14.3.69 | வெள்ளி .. | 7. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 21.3.69 | வெள்ளி .. | 14. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 28.3.69 | வெள்ளி .. | 21. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| **ஏப்பிறல்** .. | 3.4.69 | வியாழன் .. | 27. 3.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 11.4.69 | வெள்ளி .. | 31. 3.69 | திங்கள் | பி. ப. 3.30 |
| | 18.4.69 | வெள்ளி .. | 8. 4.69 | செவ்வாய் | ந. ப. 12.00 |
| | 25.4.69 | வெள்ளி .. | 18. 4.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 30.4.69 | புதன் .. | 23. 4.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| **மே** .. | 9.5.69 | வெள்ளி .. | 30. 4.69 | புதன் | பி. ப. 3.30 |
| | 15.5.69 | வியாழன் .. | 9. 5.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 22.5.69 | வியாழன் .. | 15. 5.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 30.5.69 | வெள்ளி .. | 22. 5.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| **யூன்** .. | 6.6.69 | வெள்ளி .. | 30. 5.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 13.6.69 | வெள்ளி .. | 6. 6.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 20.6.69 | வெள்ளி .. | 13. 6.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 27.6.69 | வெள்ளி .. | 20. 6.69 | வெள்ளி | பி. ப. 3.30 |

அரசாங்க அச்சகம், கொழும்பு,
1968 ம் ஆண்டு டிசம்பர் மீ 20 ந உ.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
பதில் அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.